
# வணக்கவொளி

புலத்தமிழ் காலாண்டிதழ்

இதழ்–௫ **VANAKKAVOZHI** கார்த்திகை ௨௦௧௨

துன்புறுத்தி
இன்புறும்
அரசியல்



கனவுகளோடு
வாழும்
கலைஞன்

சோதனைகள்
எல்லாம்
பெண்களுக்குத்தானா?

குர்தியரும்
ஈழத்தமிழரும்

**வணக்கவொளி பரவ, அறிவொளி பரவும்**


SRI MAHALL
ஸ்ரீ மஹால்
SRI MAHALL
PRODUITS
காதலுக்கு தாஜ்மஹால்
சிறந்த முகத்துடன் தரமான சேவைக்கு
ஸ்ரீ மஹால் பல்பொருள் அங்காடி
197, Rue du Fbg. St. Denis
75010 PARIS
M° - La Chapelle ou Gare du Nord
Tel: 01 46 07 83 12


S.P TRADERS
ALIMENTATION GENERALE
வீட்டில் நிற்பது போன்ற உணர்வு
ஆனால்
நீங்கள் நிற்பது எஸ்பி ரேடர்ஸ் கடையில்
S.P TRADERS
Alimentation Générale
PRODUITS EXOTIQUES
SPtés AFRICAINES
mentation Générale
S.P TRADERS
197 RUE DU FBG SAINT-DENIS
75010 PARIS
TEL : 01 40 36 53 99

# கனவு மெய்ப்படவேண்டும்



தலையற்ற உடல் முண்டம்
முண்டங்களும் பல துண்டுகளாக
தமிழன் சதைப்பிண்டங்களாக
ஊனங்களாக உடலங்களாக
உடையற்ற காணொளியாய்
காணொளியும் காசாக எதிரிக்கு
கண்டங்கள் தாண்டி முண்டங்கள் பல துண்டுகளாக
துண்டுகளுக்கு துணையாக காளான்கள்
காந்தத்தின் முன் இரும்புத்துண்டுகள் இணையும்
காந்தரூபத்தின் தலைதோன்ற துண்டுகள் இணையும்
காலன் அவன் உன்னைக்கவரவில்லை
காட்டிலும் காணொளியிலும் கொல்லப்பட்டவன்
தருவாய் வர தரிசனம் நீ தருவாய்
எதிரியும் சாமரம் வீச நீ வருவாய்
எதிர்வு கூற நான் கணிகனுமல்ல
கனத்த இதயங்களின் கனவு
கனவு மெய்ப்பட நீ வருவாய்

கவிதை: நகுலன்

# வணக்க ஒளியினிலே

கனவு மெய்ப்படவேண்டும்

வணக்கவொளியின் வணக்கம்

நீதியின் வரவுக்காய் மரணவாசலில் காத்திருக்கும் மக்கள்

கனவுகளோடு வாழும் கலைஞன் — பிரேம்கோபால்

நேசமுள்ள வாசகர்கள்

சுவையான செய்திகள்

துன்புறுத்தி இன்புறும் அரசியல்

வியாபாரத்தில் வெற்றியடைய...

அறிவோம் அறிவியல்

நெஞ்சைப்பிழியும் போராளிகளின் நினைவுகள்

முன்னோர் காலம் மறுபடியும் வாராதா?

இப்படியும் ஒரு மனிதனா...?

குர்தியரும் ஈழத்தமிழரும் — இதுதான் தலைவிதியா?

நாமார்க்கும் குடியல்லோம்

தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே!

ஐயோ கடவுளே!

புலத்தில் (பிரான்சில்) வீடு/சொத்து வாங்குதல்

சோதனைகள் எல்லாம் பெண்களுக்குத்தானா?

'அ' க்களும் 'மு' க்களும்

பணம் வேண்டவே வேண்டாம்!

வாத்தியாரும் கழுதையும்

தமிழுயர அறிவுயரும்

நம்ம ஊரு நல்ல ஊரு

என்னம்மா சாப்பாடு

புதிய தேடல்கள்

**ஆசிரியர்**
வி.பாஸ்கரன்

**இதழ் வடிவமைப்பு**
து.பிரபாகரன்

**கணனி எழுத்து**
பா.ஜெயராணி

**இணை ஆசிரியர்**
வி.மோகனதாசன்

**தொடர்புகட்கு**
வணக்கவொளிக் குழுமம்
vanakkavoli@yahoo.fr

# வணக்க ஒளியின் வணக்கம்

வி.பாஸ்கரன்
"வணக்கவொளி" குழுமம்

வரலாற்றிலிருந்து பாடங்களை கற்போமென ஒரு கவிதை யை எழுதி வாசித்து விடுவது இலகுவானது. ஆனால் இந்த வரிகளுக்குள் உட்சென்று எமது மனங்களை மாற்றிக் கொள்வது கடினமானது. ஆனால் முடியக்கூடியது.

பொருள் அறியாமல் தேவாரம் பாடமாக்கியவன் மனோ நிலையில் நாம் வாழ்கின்றோமா? என சிந்தித்துப் பார்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது. இந்தச் சிந்தனை திடீரென எனக்கு உதித்ததாக எண்ணி என்னை புத்திசாலிப் பட்டியலில் சேர்த்துவிட வேண்டாம்.

அண்மையில் நான் வாசித்த பால் எம்.ஸ்வீஸி என்ற மார்க்சிய அறிஞரின் மொழிபெயர்ப்பு நூலிருந்த சில வரிகள் என்னை ஆழமாக பாதித்தது. அந்த வரிகளை நீங்களும் வாசியுங்கள். மாபெரும் பொருளாதார மந்தத்துக் கும் இரண்டாம் உலகப்போருக்கும் இடைப்பட்ட காலத்தில் எங்களில் சிலர் ஒரு சிறந்த எதிர்காலப்பார்வையை இழந்துவிடாதிருந்தோம். 1950களின் பிற்பகுதியில் மேலே கூறப்பட்டமனநிலையே இருந்தது என்பதை பின்னோக்கிப் பார்க்கையில் என்னால் காண முடிந்தது எங்கே நிற்பது? எதை நம்புவது என்பது குறித்த மறுமதிப்பீட்டு தேடலுக்கு அறைகூவல் விடுப்பதாய்த்தோன்றிய பதற்றமான காலம் அது.

முள்ளி வாய்க்கால் பின்னடைவின் தொடர்ச்சி எமக்கு பதற்றமான காலப்பகுதிதான். நாம் சிறந்த எதிர்காலப் பார்வையை கொண்டிருக்கிறோமா? விடுதலைப்போராட்ட த்தை முன்னோக்கி, பின்னோக்கி பார்க்கும் அரசியல் பார்வையை கொண்டிருக்கிறோமா? எம்மிடம் மறுமதிப்பீட்டு தேடலுள்ளதா? இக்கேள்விகளை நாம் எம்மிடையே எழுப்பி பார்ப்பதனூடாக வரலாற்றிலிருந்து பாடங்களை கற்றிருக் கின்றோமா? என்பதை எமக்குள் உணர்ந்து கொள்ள முடியும்.

இப்பொழுது எஞ்சி நிற்பது எதை நம்புவது எங்கே நிற்பதென்ற குழப்பமான சோர்வான ஒதுங்கும் மனோ நிலைதான். சாதாரண மனிதர்களுக்கு இது இயல்பானது தான். ஆனால் இத்தகையை மனோநிலையிலிருந்து விடுபட்டு அதை உடைத்துக்கொண்ட மனிதர்களும் உண்டு. விடுதலை பெற்ற நாடுகளுமுண்டு. இது நம்முன்னேயுள்ள வரலாறு.

நாம் விடுமுறைக்கு எங்கே செல்லாமெனத் திட்டமிட்டுக் கொண்டிருந்த பொழுது எமக்குள்ளிருந்து ஒருவர் ஒலிம்பிக் போட்டி வரும்போது உண்ணாவிரதமிருந்து சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டுமெனத் திட்டமிட்டுக் கொண்டி ருந்தார்.

நாம் எமது குடும்பத்தின் இடர்களை, பண நெருக்கடிகளை பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தபோது அவரும் ஒரு குடும்பஸ்தனாக இருந்தபோதும் இந்த புலம்பெயர் சூழலில் வாழ்ந்து கொண்டு தனது இடர்களை தாங்கிக்கொண்டு எமது இனம் எதிர் கொண்டிருக்கும் இடர்களுக்காக உண்ணா விரதம் மேற்கொண்டிருந்தார். அவர்தான் முன்னர் ஜெனிவா வரை கால் நடைப்பயணம் மேற்கொண்ட மனித நேயன்

திரு சிவந்தன் அவர்கள் ஆகும்.

திரு. சிவந்தனுக்கு எங்கே நிற்பது? எதை நம்புவது? என்ற குழப்பான மனோநிலை இல்லை. தனது வழியில் ஜனநாயக வழியில் வாழிடத்தின் சட்டங்களுக்கு கட்டுப்பட்டு தனது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார். விடுதலைப் போராட்டம் இன்னமும் இருக்கிறது. அது தோற்றுப் போய்விடவில்லை. அதன் இருப்பை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தி வருகின்றார்.

எமது இருப்புக்கள் சிறீலங்கா அரசாங்கத்தால் அழிக்கப்பட்டு கொண்டிருக்கும் நிலையில் எமது போராட்டத்தின் இருப்பை பதிவு செய்வது எமது கடமையகும். எமது அடையாளங்கள் அழிக்கப்படுவது எமது இனத்தின் இருப்புக்கு ஆபத்தான தாகும்.

புலம்பெயர் தமிழ் மக்கள் செய்வதறியாது நிற்கும் நிலையில் எதைசெய்ய வேண்டுமென்பதை காலத்தின் தேவையறிந்து விடுதலை போராட்டத்தின் இருப்பை வரலாற்றில் பதிவுசெய்த மனித நேயன் திரு. சிவந்தன் அவர்களை வணக்கவொளி பதிவு செய்து கொள்கின்றது.

இவ்விதழோடு நாம் ஓராண்டை பூர்த்தி செய்கின்றோம். விழாவை கொண்டாடும் விருப்பம் தற்போதைக்கு இல்லை. ஏதாவதொன்றை சாதித்துவிட்டு கொண்டாடுவதுதான் அர்த்தபூர்வமுள்ளதாக இருக்கும். நாம் இவ்வோராண்டு பூர்த்தியில் வாசகர்கள் வணக்கவொளி மீது வைத்திருக்கும் குறைநிறைகளை கவனத்தில் கொள்கின்றோம். அட்டைப் படவடிவமைப்பு, உள்வடிவமைப்பு என்பவற்றில் கவனம் செலுத்தப்படல் வேண்டுமென்ற கருத்து வாசகர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. நாம் அக்கருத்தை ஏற்றுக்கொள் கின்றோம். அதன் உள்ளடக்கத்திலும் மக்களிடமிருந்து கற்றுக்கொண்டு மக்களுக்கானதை படைக்க வேண்டு மென்பதை சுயவிமர்சனத்தினூடாக புரிந்து கொள்ளு கின்றோம்.

நாங்கள் மீண்டும் மீண்டும் உங்களிடம் கேட்பது இதைத் தான். எம்மோடு சந்தாதாரராக இணையுங்கள். ஏற்கனவே எம்மோடு இணைந்தவர்கள் சந்தாக்களை புதுபித்துக் கொள்ளுமாறு தாழ்மையோடு வேண்டிக்கொள்கின்றோம்.

நன்றி.

**மீண்டும் அடுத்த இதழில்...**

## நூல்களும் பயில்தலும்

**ஒரு கெட்ட புத்தகம் தவறான கருத்துக்களைக் கற்பித்து, அறியாதவரை மேலும் அறியாமை மிக்கவராக ஆக்குகிறது.**

**உன் மக்களின் அறிவு வளார்ச்சிக்கான புத்தகங்களைத் தேர்வு செய்வது ஓர் அறிவியல் மட்டுமில்லை, ஒரு களையும் ஆகும்.**

**படிப்பகங்கள் எண்ணிலடங்கா வண்ணம் இருக்கையில் இக்கால மனிதன், ஒரு மணற் குன்றில் தங்கத் துகள்களைத் தேடிக் காணும் ஒரு தங்க வேட்டைகாரனைப் போலவே உள்ளான்.**

## சொல்லக் கொஞ்ச விசயங்கள்

# நீதியின் வரவுக்காய் மரணவாசலில் காத்திருக்கும் மக்கள்

வி. மோகனதாசன்

சர்வதேசத்திலிருந்து எழும் அழுத்தங்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள, சிங்கள இனவாத அரசு எதனையும் செய்யத் தயங்காது என்பதை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியிருக்கிறது.

மூன்றாண்டுகளுக்கு மேலாக நலன்புரி முகாம்கள் என்ற பெயரில் இராணுவக் கோரக்கரங்களில் வதைபட்ட நம் உறவுகளை, விலங்குகளை போல் காடுகளில் கொண்டு போய் இறக்கிவிட்டு, இனி அகதிகள் என்று இங்கு யாரும் இல்லை என்று சர்வதேசத்துக்கு அறிவித்திருக்கிறது. இவ்வாறு போரினால் இடம்பெயர்ந்த தமிழ்மக்களின் பிரச்சனையை



தீர்த்து வைத்திருக்கிறது சிங்களஅரசு. இனி வரும் நாட்களில் இந்த 'மனிதநேய செயலை' மெய்ச்சி சர்வதேசம் சிங்கள அரசுக்கு நற்சான்றிதழும் வழங்கக்கூடும்.

தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற சர்வதேசத்தின் நச்சரிப்பையும், எஞ்சி உயிரோடு இருக்கின்ற தமிழர்களை கடலில் தள்ளிவிட்டு, இலங்கைத்தீவில் தமிழர்கள் என்று யாரும் இல்லை, நாங்கள் தமிழர்களின் பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவந்து விடடோம் என சிங்கள அரசு அறிவிக்கவும் தயங்காது. சிங்கள அரசுக்கு சர்வதேசம் வழங்கி வரும் கால அவகாசமும், கண்டு கொள்ளாமல் இருத்தலும், சிங்கள இனவாத அரசுக்கு இவ்வாறான துணிச்சலைத் தொடர்ந்து கொடுத்துவருகின்றது.

இராணுவ ஆக்கிரமிப்பில் தங்கள் சொந்த வாழ்விடங்களை பறிகொடுத்த மக்களும், தங்கள் சொந்த உறவுகளை தொலைத்துவிட்டு தவித்துக்கொண்டிருக்கின்ற மக்களும், இனவாத அரசுக்கு ஏதிரான வெகுமக்கள் போராட்டங்களை ஆங்காங்கே தொடக்கியிருக்கிறார்கள். இந்தப்போராட்டங்கள் இராணுவக் கொடுங்கரங்களால் மிலேச்சத்தனமாக அடக்கப்டுகின்ற போதும், வாழ்வா, சாவா என விளிம்புநிலையல் வாழும் மக்களுக்கு, பேராடுவதைத் தவிர வேறு வழியொன்றையும் அரசு விட்டுவைக்கவில்லை. நிலைமை இவ்வாறிருக்க, அரசின் அபிவிருத்தியலும், தேனொழுகும் பரப்புரையிலும் 'மனம் பறிகொடுத்த' புலம்பெயர் தமிழர்கள், ஊர்போய்

> விடுதலைப் போராட்டத்திற்கு இரத்தமும் சதையுமாக நின்று உயிர் கொடுத்த மக்களும் போராளிகளும் இன்று அனாதரவாக நிற்கின்றனர். எங்களுக்காக எல்லாவற்றையும் இழந்து இன்று அல்லற்படுகின்றனர். அவர்கள் உதவி வேண்டித்தவிக்கும் போது அதனைச் செய்யாமல் நாடு, தேசம், விடுதலை என்னும் வெற்றுப் பேச்சுக்களில் என்ன அர்த்தம் இருக்கப் போகிறது?

தங்கள் நோக்கங்களை ஈடேற்றி, நாடு திரும்பிய கையோடு' அங்கு எல்லாம் அந்த மாதிரி இருக்கு' என்று திருவாய் மலர்கின்றனர். அரசின் பரப்புரையை மிஞ்சிவிடுமளவிற்கு இவர்கள் வாந்தியெடுக்கிறார்கள். போகிற போக்கைப்பார்த்தால் 2009 இல், 'தமிழின வழிப்புப்போர்' என்ற ஒன்று நடக்கவில்லை என்றும் அடித்துச் சொல்லவும் கூடும். இப் படியே சொல்லிக்கொண்டிருந்தால் இவர்கள் போய் வருவதற்கும் ஊர் இருக்காது என்ற கதையை இவர்கள் காதில் யார் சொல்ல?

விடுதலைப் போராட்டத்திற்கு இரத்தமும் சதையுமாக நின்று உயிர் கொடுத்த மக்களும் போராளிகளும் இன்று அனாதரவாக நிற்கின்ற னர். எங்களுக்காக எல்லாவற்றையும் இழந்து இன்று அல்லற்படுகின்றனர். அவர்கள் உதவி வேண்டித்தவிக்கும் போது அதனைச் செய்யா மல் நாடு, தேசம், விடுதலை என்னும் வெற்றுப் பேச்சுக்களில் என்ன அர்த்தம் இருக்கப் போகிறது? இப்போது போரும் இல்லை வெற்றிச் செய்திகளும் இல்லை, இனி என்ன இருக்கிறது? என்று நாம் ஒதுங்கியிருத்தல் நியாயமா? உண்மையில் மக்களையும் மண் ணையும் நேசித்தவர்களால் அப்படி இருக்க முடியுமா?

எங்கள் மக்கள் தங்கள் சொந்தக்கால்களில் நிற்பதற்கு, எங்களால் முடிந்ததை நாம் அனை வரும் செய்தாக வேண்டும். அப்போதுதான் புலம்பெயர் தமிழர்களின் நடவடிக்கைகள் மீது அவர்கள் நம்பிக்கைகொள்வர். ***அவர்கள் இருப்பில்தான் தாயகத்தின் இருப்பும் இருக்கிறது!***

# சண்டை செய்யும் வழிமுறை

## பொருட்கள்


அரசியல் 2kg
மதம் 100g
சாதி 100g
அரட்டை தேவையான அளவு

## செய்யும் முறை

முதலில் அரசியலை வாயில் போட்டு நன்றாக சூடு ஏறும் வரை வறுங்கள். இடையிடையே அரட்டையைப் போட்டுக் கிளற வேண்டும். நன்கு சூடு ஏறியவுடன் சாதியைப் போட்டுக் கிளறுங்கள். அப்போது பொங்கி எழும். அந்தநேரம் மதத்தை தூவி இறக்குங்கள். சண்டை தயார்.



# கனவுகளோடு வாழும் கலைஞன்–பிரேம்கோபால்




தமிழகத்தின் நடன ஆடுகளத்தில் வெற்றி வாகைசூடிய ஈழத்துக்கலைஞன் பிரேம் கோபாலுடன் மனம் திறந்த முழுமையான நேர்காணல்

***வணக்கம் பிரேம், உங்களின் சிறுபிராயத்தில் இருந்தே 'வணக்கவொளி' குடும்பம் உங்க ளை நன்கறியும் என்றபோதிலும், எல்லோரும் அறிந்து கொள்வதற்காக, இந்த நடனத் துறைக்கு வருவதற்கான உங்கள் குடும்பப் பின்னணி எவ்வாறு அமைந்தது எனற வழமையான கேள்வியோடு இந்த நேர்காணலை தொடங்குவோமா?***

**சந்திப்பு: வி. மோகனதாசன்**

வணக்கம், எங்கள் வீட்டைப்பொறுத்தவரையில், யாரும் நடனக்கலைஞராக இருந்ததில்லை என்றாலும் எனது அம்மா தனது 10, 11 வது வயதுவரை நடனமாடியிருக்கிறார். இன்னொன்று அம்மாவின் தந்தை, எனது தாத்தா கரகாட்ட நடனக்கலைஞராக இருந்திருக்கிறார்.

***அப்படியென்றால் நீங்கள் கலைக்குடும்பத்தின் பின்னணியைக் கொண்டவர்தான் என்று கூறுங்கள்?!***

ஆமாம், (சிரிக்கிறார்) எப்படி எனக்குள் நடனம் புகுந்துகொண்டிருக்கும் என பின்னாளில் துருவித்துருவித் தேடியபோது கண்டுபிடித்தவை தான் இவை! அம்மா எனது சிறுபிராயம் குறித்து சொல்கின்றபோது சொல்வார,? நான் சிறுவனாக இருந்தபோது உரலின் மீது தட்டொன்றை வைத்து அதற்குமேல் நின்று 'சாகசநடனம்' எல்லாம் ஆடியிருக்கிறேனாம்!

***சரி, நீங்கள் தாயகத்தில் எந்த இடத்தைச் சேர்ந்தவர்? பிரான்சுக்கு எப்போது வந்து சேர்ந்தீர்கள்?***

ஊரில் நான் அளவெட்டியைச் சேர்ந்தவன், யாழ்பாணத்தில் பின்னர் வசித்திருக்கிறோம். 90 ஆம் ஆண்டில் எனது 16 வது வயதில் பிரான்சுக்கு வந்தேன்.

***சின்னவயதென்று சொல்லமுடியாது விசயம் தெரிந்த வயதில்தான் பிரான்சுக்கு வந்தீர்கள்?***

இல்லை. (சிரித்துக்கொண்டே இடைமறிக்கின்

றார்) அப்பவே நான் சின்னப்பிள்ளை மாதிரித்தான். என் 16 வது வயதில் நான் 11, 12, வயது சிறுவன் போலவே இருந்திருக்கிறேன். எங்கள் வீட்டில் நான்தான் கடைக்குட்டி, எல்லோரது மடிகளிலும் தவழ்ந்தே செல்லமாக வளர்ந்திருக்கிறேன். ஆக என் 16 வது வயதில், அதற்குரிய தோற்றமோ ஏன் புத்தியோகூட (சிரிக்கிறார்) எனக்கு இருந்ததில்லை.

***ஏன் இன்றும் கூட, உங்கள் வயதில் இருந்து 10 வயது குறைத்து கணிப்பிடக்கூடிய, இளமை யான தோற்றத்தோடே நீங்கள் இருக்கிறீர்கள். நல்லது பிரான்சுக்கு வந்தபிற்பாடு எப்படி அமைந்தது உங்கள் வாழ்வு?***

இங்கு வந்ததன் பிறகுதான், தொலைக்காட்சி களில் நடனங்களை பார்கிறபோது, அட! இவங்கள் எல்லாம் நல்லாய் ஆடுறாங்களே, என்ற ஆச்சரியமும் இந்தச் சூழலும்தான் நடனத்துக்குள் நான் ஈர்க்கப்பட்டதற்கான காரணம் என நினைக்கிறேன்.

***அப்படியென்றால் நீங்கள் ஊரில் இருந்தபோது நடனத்தில் ஈடுபாடோ, அல்லது அதனை கற்றுக்கொண்டதோ இல்லையா?***

இருந்திருக்கிறது. பரதநாட்டியம் ஆடவேண்டும் என்ற விருப்பம் இருந்திருக்கிறது. ஆனால் எனக்கில்லை என் நண்பனுக்கு! அவருக்கு நடனத்தின் மீது அப்படியொரு தீராத காதல்! ஒருமுறை, நடனம் கற்றுக்கொள்வதற்காக நானும் என் நண்பனும் நடனஆசிரியர் ஒரு வரின் வீட்டைக் கஸ்ரப்பட்டுத்தேடி, அவரது வீட்டின் 'கேற்' வரை சென்றுவிட்டோம். இன்னும் கொஞ்சத்தூரம் உள்ளே போனால் வீட்டின் வாசல். ஆனால் கேட்க வெட்கத் தினால் நாம் கேட்காமலேயே திரும்பி விட்டோம்.(பலமாகச் சிரிக்கிறார்) என் நண்பனு க்குத்தான் நடனத்தில் காதல். சேர்ந்து போக வேண்டும் என்பதற்காக நானும் அவன் கூடச் சென்றிருந்தேன்.

***காதலுக்கு தூதுபோய் நீங்களே காதலில் வீழ்ந்தது போல எனச்சொல்லுங்கள்?***

ஆமாம், ஆமாம்! (சிரிக்கிறார்) நடனம் என்னை வசிகரித்துக்கொண்டது. இங்கு வந்த பிறகு தொலைக்காட்சிகளில் புதுப்புது விசயங்கள் பார்க்கக்கிடைத்தது. Hip-Hop, Rap யையும் பார்த்தபோது அதில் ஆசையே வந்தது. இதயம் படபடக்கத் தொடங்கியது பிறகென்ன எனது கைகளையும் கால்களையும் ஆட்டத் தொடங்கிவிட்டேன்.

***நீங்கள் ஒரு சிறந்த பரதநாட்டியக் கலைஞரா கவும் இருக்கிறீர்கள், எப்போது அதனைக் கற்றுக்கொண்டிர்கள்?***

என்னுடைய 19 வது வயதில்!

***உங்களது 19 வது வயதிலா?! கற்றுக்கொள்ள வயது இல்லை என்றாலும், பல ஆண்டுகள் கற்றுத்தேற வேண்டிய பரதநாட்டியத்தை 19 வயதில் தொடங்குவது என்பது ஒரு பிரச்சனை யாக இருக்கவில்லையா? யார் உங்கள் நடன ஆசிரியர்?***

வயது ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை! கௌசல்யா ரீச்சர்தான் என் நடன குரு.

***எவ்வளவுகாலம் நடனத்தைக் கற்றீர்கள்? அரங்கேற்றம் வரை நிறைவு செய்தீர்களா?***

நான்கு வருசம் வரை படிச்சேன். அரங்கேற்றம் வரை போகும் ஈடுபாடும் எனக்கிருக்கவில்லை. அரங்கேற்றத்தை முடித்து 'டிப்ளோம்' பெற்று 'ரீச்சர்' ஆக இருக்கும் நோக்கமும் எனக்கு இருந்ததில்லை.

***மேற்கத்தேய நடனத்தில் ஈடுபாடுகொண்ட ஒருவர், எப்படி பரதநாட்டியத்தை கற்றுக் கொள்ளத் தெர்ந்தெடுத்தீர்கள்?***

மேற்கத்தேய நடனங்களை ஆடுவதற்கு பரத நாட்டியத்துக்குள் போகவேண்டும் என்று எனக்குள் எப்படி அந்த எண்ணம் தோன்றியதோ எனக்குத்தெரியாது. நான் அதற்குள் போய்விட்டேன். அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. எல்லோருமே தங்கள் தங்கள் நடனங்களை ஆடும்போது நான் ஏன் எங்களுடைய நடனத்தை ஆடக்கூடாது? அந்தநேரத்தில் என் அறிவுக்கு அப்படித்தான் தோன்றியது.

***நல்லது, 19 வது வயதில் அதுவும் ஓர் இளம் வாலிபனாக, பரதநாட்டியம் கற்றுக்கொள்வதற்காக உங்கள் நடன ஆசரியர் முன்னால் போய் நின்றபோது அவர் அதனை எப்படி எடுத்துக் கொண்டார்?***

என்ன விசயம் என்றால், பல நடன ஆசிரியர்களிடம் நடனம் கற்றுக்கொள்ளும் என் விருப்பத்தை தெரிவித்திருந்தேன். ஆனால் ஒருத்தருமே என்னை சேர்த்துக்கொள்ளவில்லை. மற்றைய ஆசிரியர்களின் பின்வாங்கலுக்கும் என் வயதும் ஒரு காரணமாக இருந்திருக்கக் கூடும். கடைசியாக கௌசல்யா ரீச்சரிடம் போய் நின்றேன். அவர்தான் என் நோக்கத்தை சரியாக புரிந்துகொண்டு என்னை ஏற்றுக் கொண்டார்.

***சரி, நடனக்குழுவொன்றை அமைக்கவேண்டும் என்ற எண்ணம் எப்படி, எப்போது உருவாகியது?***

93, 94 களில், பிரான்சில் மக்களால் அறியப்பட்ட தமிழ் நடனக்குழுக்கள் என்று எனக்குத் தெரிந்த மட்டில் எதுவும் இருந்ததில்லை. சிலவேளை ஒன்றிரண்டு இருந்திருக்கக்கூடும். அந்தநேரத்தில் நானும் அருள் என்னும் நண்பனும் சேர்ந்து ஒரு நடனக்குழுவை அமைப்போம் என்ற முடிவோடு அதற்கான ஆள்தேடும் படலத்தை தொடங்கினோம். அப்படித்தேடும் போதுதான் அருள் படித்துக் கொண்டிருந்த பாடசாலையில் இருந்து மைக்கேல் மற்றும் அலெக்ஸ் ஆகியோரின் அறிமுகம் கிடைக்கிறது. இன்று சிறந்த கலைஞர்களில் ஒருவராக தன்னை அடையாளப்படுத்தியுள்ள மைக்கேலின் சொந்தப்பெயர் சிவா. அவருக்கு மைக்கேல் ஜாக்ஸனை ரொம்பப்பிடிக்கும். அவரைப்போலவே நன்றாக ஆடுவார். அதனால் 'மைக்கேல்' என்று பெயரை வைத்துவிட்டோம். அலெக்ஸ் அப்போது ஆடவில்லை. அப்பப்போ வந்துபோய்க்கொண்டிருந்தார். மைக்கேல், அருள், நான், பிரசாந், சுரேஸ் இந்த ஐந்து பேரும்தான் முதன்முதலில் மேடையேறினோம்.

***அந்த முதல் வாய்பினை உங்களுக்கு வழங்கிய அந்த 'புண்ணியவான்கள்' யார்?***

அது சுகன்யா, 'டான்ஸ் மாஸ்ரர்' சம்பத்குமார், விவேக் போன்ற தென்னிந்திய திரைநட்சத்திரங்கள் பங்கேற்ற ஒரு கலைநிகழ்ச்சி, RTN BROTHERS அந்த நிகழ்வினை ஒழுங்குபடுத்தியிருந்தார்கள். வாய்பினைக் கேட்டபோது இலகுவாகக்கிடைத்துவிட்டது. ஆனால் ஒத்திகை பார்ப்பதற்கு இடம்தேடி அலைந்ததை மறக்க முடியாது. கடைசியில் 'சார்சல்' சந்தைப்பகுதியில்தான் ஒத்திகை பார்த்துக்கொண்டோம்.

***முதல் மேடை அனுபவம் எப்படியிருந்தது?***

முதன்முதலில் மேடையேறி கைதட்டுக்களை வாங்கியதை என்றும் மறக்கமுடியாது. நடனத்தில் இன்னும் ஈடுபாடுகூடியது, கைதட்டு வாங்கிவாங்கிப் பழகினால் அந்தக் கைதட்டுக்காகவே நிறையவிசயம் செய்வோம்.

**ஒரு கலைஞனுக்கான மிகப்பெரிய கௌரவம் என்பது பார்வையாளனிடமிருந்து கிடைக்கும் கைதட்டல்களும், பாராட்டுதல்களும்தானே! அந்த ருசியை அனுபவிக்கத்தொடங்கிய கலைஞன் அதற்கான உழைப்பினைக் கொடுக்கத் தயங்கமாட்டான்.**

***அவதாரம் என்ற பெயரில்தான் அப்போது உங்கள் நடனக்குழு இயங்கிவந்ததா?***

இல்லை. New Friends என்ற பெயரிலேயே இயங்கிவந்தோம். 2000 ஆம் ஆண்டில் தான் 'அவதாரம்' என்னும் பெயரில் புதிய அவதாரம் எடுத்தோம்.

***தமிழரல்லாத பிறநாட்டு மக்கள் மத்தியில் உங்கள் நடனக்குழுவிற்கு எப்படியான வரவேற்பு இருந்தது?***

95, 96 களில், பிரெஞ்சுக்காரர்கள் மற்றும் ஏனைய நாட்டவர்கள் மத்தியில் ஆடத் தொடங்கி விட்டோம். 97 ஆம் ஆண்டு பாரிசில், La Vilette என்னும் இடத்தில் இடம்பெற்ற பெரிய நடன விழாவில் 'சிறந்த நடன அறிமுக குழுவிற்கான' விருதினையும் பெற்றோம்.

***ஐரோப்பிய நடனக்குழுவொன்றோடும் இணைந்தும் நீங்கள் பல நாடுகளுக்கும் சென்று கலை நிகழ்சிகளை வழங்கியதாக அறிகின்றோம். அவர்களுடனான தொடர்பு எப்படிக்கிடைத்தது?***

2000 ஆம் ஆண்டென்று நினைக்கிறேன். opéra bastile , என்னும் இடத்தில் இந்திய நடனக்கலைஞர்களான சாவித்திரி நாயர், அவரது மகள் சாந்தலா சிவலிங்கப்பா ஆகியோருடனான அறிமுகம் கிடைத்தது. அவர்களோடு சேர்ந்து théatre de la ville என்னும் அரங்கில் நிகழ்சியொன்றை செய்தேன். பிரான்சில் முக்கியமான அரங்குகளில் அதுவும் ஒன்று. அவர்கள் தான் talipot நடனக்குழுவினரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். talipot நடனக்குழு ஆற்றல் வாய்ந்த சிறந்த அரங்க நிகழ்வுகளை வழங்கி கொண்டிருந்தார்கள். அவர்களுடைய 'தண்ணீர் சுமப்பவர்கள்' நாட்டிய நிகழ்வைப் பார்த்தேன். அது என்னை அப்படியே புரட்டிப்போட்டு விட்டது. நீங்கள் அதனைப் பார்தீர்களானால்... அப்படியே உருகிப்போய்விடுவீர்கள்! எப்படியாவது அவர்களோடு சேர்ந்து ஆடவேண்டும் என்றவெறியே எனக்குள் வந்துவிட்டது. அவர்களோடு தொடர்பில் இருந்தேன். ஆனால் வாய்ப்பு உடனே வந்துவிடவில்லை. பின்னர் மூன்றாண்டுகள் கழித்து அவர்களது இன்னொரு நடனத்தையும் பார்த்தேன். அது அவர்களோடு சேர்ந்து பணி புரியவேண்டும் என்ற விருப்பத்தை இன்னும் தீவிரப்படுத்தியது. 2000 ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் அழைப்பிற்காக காத்திருந்தேன். இறுதியில் 2005 இல் ஜனவரிமாதம் Réunion தீவில் 'உடல் காற்றின் குடிசை' என்னும் நடனத்தில் அவர்களோடு பங்கேற்றேன்.

***படைப்புருவாக்கம் மற்றும் தயாரிப்பு முறைகளில் அவர்களிடமிருந்து புதிய அனுபவங்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருக்கும் அல்லவா?***

ஆமாம், அரங்கில் ஒரு நிகழ்சியை மேடையேற்றுவதற்கு முன்பு குறைந்தது ஆறு மாத காலமேனும் பயிற்ச்சியில் ஈடுபடுகிறார்கள். நேர்த்தியான திட்டமிடல் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டியது. கருவொன்றை வைத்துக்கொண்டு, அதனை மேலோட்டமாகப் பார்க்காமல் உள்ளே ஆழமாகத்தேடி விசயங்களை கொண்டுவரும் வகையில், ஒன்றாக இருந்து நிறையப்பேசுவோம். சொல்லப்போனல் அது ஒரு கூட்டு முயற்ச்சியாகவே எப்போதும் இருக்கும். பாத்திரங்களுக்குரிய கலைஞர்களை

யும் முன்கூட்டியே தீர்மானிப்பதில்லை. எல்லாவற்றையும் செய்து பார்க்கிறபோது அந்தப் பாத்திரத்துக்கு யார் சரியாகப் பொருந்திப் போகின்றார்களோ அவர்களே தெரிவுசெய்யப்படுவர். உடற்பயிற்சி, நல்ல மனநிலையை பெறுவதற்கு தியானம் என்று கலையினை வெளிபடுத்துவதற்கான தயார்படுத்தல்களில் ஈடுபடுவோம். எல்லாவற்றையும் செய்து உள்ளே இறங்கினால் கலை தானாகவே வரும். உடல் என்பது கலையினை வெளிப்படுத்தும் கருவியாகவே அவர்கள் பார்க்கிறார்கள்.

talipot நடனக்குழுவில் துணை நடன வடிவமைப்பாளர் என்ற நிலை எட்டிய பிரேம் கோபால், ஐரோப்பிய, ஆப்பிக்க நாடுகளில் நடனநிகழ்வுகளை வழங்கி புகழோடு இருந்தவர், ஏன் அதனை எல்லாம் விட்டு தமிழகம் சென்றார்? அவரது சுவையான பதில்களை அடுத்த இதழில் தொடர்கின்றார்...

## நூல்களும் பயில்தலும்

புத்தங்களைத் தேர்தெடுப்பதில் மட்டுமல்லாமல், படிப்பது என்ற நடைமுறையின் போதும், மனத்தை மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்துவது எது என்பதைத் தேர்தெடுக்கவும் நீ கற்றுக் கொள்ள வேண்டும்.

# நேசமுள்ள வாசகர்கள்

வணக்கவொளி ஆசிரியர் அவர்கட்டு!

வணக்கவொளியை தவறாமல் வாசித்து வருகின்றேன். எனக்கு கழுதையும் வாத்தியாரும் என்ற தொடர் மிகவும் பிடித்த தொன்று. அது நீண்டகால இதழில் தொடரவேண்டும். மற்றும் ஈழத்து நாட்டார் பாடல், மருத்துவம் என்பன இன்னும் கூடுதலாக இணைக்கப்படல் வேண்டும். வணக்கவொளி இதழ் நீண்டகாலம் தொடர எனது வாழ்த்துக்கள்.

நன்றி

**ஆசிரியர் திருமதி**
**ச. புண்ணியமூர்த்தி**

வணக்கவொளியை வாசனை செய்பவனில் நானும் ஒருவன். ஒரு மனிதனுக்கு உணவுப்பசி இருப்பது போல அறிவுப்பசியும் இயற்கையான ஒன்று. உணவை உண்ணும் போது நிறை உணவாக உண்ண வேண்டும். உடலுக்கு தேவையான எல்லாச்சத்துக்களும் இருக்க வேண்டும். அது போல அறிவுப்பசிக்கும் நிறை அறிவு கொண்டதாக எல்லா வாசகர்களினதும் அறிவுப்பசியையும் உள்வாங்கி எல்லா விடயங்களையும் உள்ளடக்கியதாக எதிர்வரும் இதழ்களில் பரிமாற வேண்டும் என ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன். வணக்கவொளி ஆரோக்கியமாக வளர்ந்து வர எனது நல்லாசிகள்.

வாழ்க வளமுடன்

**நோர்வேயிலிருந்து**
**வி.கருணாகரன்**

# சுவையான செய்திகள்

## அங்கேயும் இப்படி

இங்கிலாந்தில் லிவர்பூர் என்ற ஊரில் இருக்கும் கம்பனி ஒன்றுக்கு மின்சார விநியோக அலுவல கத்திலிருந்து ஒரு பில் வந்தது. கட்டவேண்டிய தொகை 0 பவுண்ஸ் 0சென்ஸ் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே பணம் கட்ட வேண்டியதில்லையென்று கம்பனி பேசாமல் இருந்துவிட்டது. ஒரு மாதம் கழித்து பில் தொகை கட்டப்படவில்லையென்று நினைவு படுத்தி மின்சார அலுவலகத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. எனவே கம்பெனியினர் விளை யாட்டாக 0 பவுண்ஸ் க்கு ஒரு செக் அனுப்பி வைத்தனர். இரண்டு தினங்களில் இத்தொகை க்கு ஒரு ரசீதும் வந்து சேர்ந்தது.

## காதல் மன்னன்

ஜெர்மன் நாடாகசிரியரும் கவிஞருமான கெகே காதலிப்பதைக் கலையாகப் பயின்றிருந்தார். எந்தப் பெண்ணையும் கவரக்கூடியதாக அவருடைய கம்பீரமான தோற்றம் இருந்தது. சுமார் 200 பெண்களை அவர் காதலித்திருக் கிறார்.

## விஞ்ஞானத்தொண்டர்

மின்சாரத்தின் தந்தையெனப் போற்றப்படும் மைக்கேல் பாரடே ஒரு கருமானின் மகன், படிக்க வசதி இல்லாமல் பைண்டராக வேலை பார்த்தார். தம்மிடம் பைண்ட் செய்வதற்கு வரும் புத்தகங்களைப் படித்தே தமது அறிவை வளர்த் துக்கொண்டார். பிறகு விஞ்ஞானி ஹம்பரி டேவீட்டின் உதவியாளராக சேர்ந்தார். என்னு டைய கண்டுபிடிப்புகளில் எல்லாம் சிறந்தது நான் பாரடேயை அடைந்ததுதான் என்று டேவிட் பெருமையாக கூறுவார்.

பாரடே மின்காந்தக் கடத்தலை கண்டறிந்து கூறியதும் உலகபுகழ் பெற்றார். அவர் நினைத் திருந்தால் கோடிக்கணக்கில் சம்பாதித்திருக்க லாம். அரசு ஆண்டு தோறும் அளித்து வந்த 100 பவுண் உதவித் தொகையுடன் அவர் திருப்தியடைந்து விட்டார். எவ்வளவோ பதவி கள் அவரைத்தேடி வந்தன. விஞ்ஞானத்தின் அடக்கமான தொண்டராகவே நான் இருக்க விரும்புகிறேன்! என்று கூறி எதையும் ஏற்க மறுத்து விட்டார்.

## உலக மணிமொழிகள்

எப்பொழுதும் கீழே விழாமல் இருப்பது புகழுக்குரியதல்ல. விழும்போதெல்லாம் விழுந்தெழுவதுதான் பெரும் புகழ் பெறும் வழி.

சிந்திக்காமல் படிப்பது வீண். படிக்காமல் சிந்திப்பது ஆபத்தானது.

தங்கள் பெற்றோரிடம் அன்பு செலுத்துபவர்கள் பிறரிடம் வெறுப்புக் காட்ட துணிய மாட்டார்கள்.

உங்கள் வாழ்க்கைக் குறிக்கோளில் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று நீங்கள் விரும்பியதை அடைவது. இரண்டாவது அடைந்ததை அனுபவிப்பது. அறிவாளிகள் இரண்டாவதை நிறைவேற்றுகிறார்கள்.

# துன்புறுத்தி இன்புறும் அரசியல்

உலகநேயன்

துன்பம், இன்பம் என்ற சொற்கள் அழகான ஒலிவடிவம் பெற்று எழுத்து வடிவம் பெற்றிருக் கின்றன. உலகின் பல்வேறு மொழிகளிலும் மனிதர்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில் சொல்லாக்கம் பெற்றிருக்கின்றன. இச்சொற்களுக்குரிய உணர்வுகளை அனுபவி க்கக்கூடியதாக உலக அரசாட்சிகளை மக்கள் அடைந்திருக்கிறார்களா? இதுதான் எம்முன் எழுந்துள்ள இன்றைய கேள்வி.

காடுகளுக்குள் மனிதன் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தபோது மிருகங்களுக்கு பசித்த போது மனிதர்கள் வேட்டையாடப்பட்டார்கள். கற்களால் ஆன ஆயுதங்கள் கண்டு பிடிக்கப் பட்டபோது, மிருகங்கள் மனிதர்களால் வேட்டை யாடப்பட்டன. இக்காலத்திலும் மனிதர்கள் முழுமையாக இன்புற்று வாழவில்லையென்பது தெரிகிறது. அச்சம், பயம் போன்ற உணர்வு களோடுதான் வாழமுடிந்தது.

பலசாலியாக இருந்த காட்டு மனிதனுக்கு மற்றவர்கள் பயம்கொண்டவர்களாகத்தான் வாழமுடிந்தது! பலம்கொண்ட காட்டுமனிதன் தமது கூட்டத்திலுள்ள விருப்பப்பட்ட பெண்க ளையெல்லாம் புணர்ந்தான். அந்தக்காலத்தில் வாழ்ந்த பெண்களுக்கு விருப்பு, வெறுப்பிற்கு இடமில்லை. இதிலிருந்து அக்கால காட்டுப் பெண்கள் முழுமையான, இன்பமயமான வாழ்க் கையை வாழமுடியவில்லை என்பதினை அறிய முடிகிறது.

தாய்வழிச்சமூகம்,ஆண்டான் அடிமைச்சமூகம், மன்னர்ஆட்சிக்காலம், மக்களாட்சிக்காலமென உலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது.

பிரபுக்கள் ஆட்சிக்காலத்தில் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக்கண்டு சகித் துக்கொள்ளமுடியாமல் மனித நேயமுள்ள அரசியல் தத்துவஞானிகள் தோற்றம் பெற்றார்க ள். இவர்களுக்கு மதவாதிகளால் மரண அச்சு றுத்தல்கள் விடுக்கப்பட்டதோடு மட்டுமல்லா மல் மரணதண்டனைகளும் நிறைவேற்றப்பட் டன. பரிணாம வளர்சிக்கோட்பாட்டிற்காக டார் வினுக்கும் திருச்சபைக்கும் மோதலேற்பட்டது. அரசியல் சிந்தனையாளர்களின் உயிருக்கு அஞ்சாத போராட்டங்களிற்கூடாக மக்களாட்சித் தத்துவம் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனாலும் அதற்கு எதிரானவர்களால் 'நூறு எலிகள் ஆள்வதைவிட ஒரு சிங்கம் ஆள்வது மேல்' என்ற எதிர்வாதம் முன்வைக்கப்பட்டது. இதுவே பின் சர்வாதிகார ஆட்சிக்கும் வழிவகுத்தது. மக்கள் இன்பமயமான வாழ்க்கை வாழவேண்டு மென்பதற்காக அரசியல் சிந்தனையாளர்கள் துன்புற்றார்கள்.

உலகம் பல போர்களை சந்தித்தது. உலக மக்கள் பெரும்துன்பங்களை சந்தித்தபின் ஒரள வாவது சுதந்திரத்தை அனுபவிக்கக்கூடியவாறு மக்களாட்சி மலர்ந்தது. வாக்குரிமையும் மக்களு க்கு கிடைத்தது. நாட்டை ஆளும் தலைவர்கள் மக்களால் தெரிவுசெய்யக்கூடிய நிலையேற் பட்டது. அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றன. மக்கள் கூறுபோடப்பட்டார்கள். துன்புறுத்தப் பட்டார்கள்.

இன்றைய ஜனநாயக சூழலிலும் உலகத்திற்கு தலைமைதாங்கும் நாடுகளினால் யுத்தங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. பிராந்தியநலன், வர்த்தக போட்டிகள்தான் போர்களுக்கான

உண்மையான காரணங்களாக இருந்தும் உலகமக்களுக்கு பொய்யான போர்க்காரணங் கள் கூறப்படுகின்றன. உலக மக்கள் யாவருமே போர்களினால் உடல், உள ரீதியாக துன்புறு த்தப்படுகின்றனர். வரலாறு முழுவதும் பல இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்.

இலங்கைத்தீவிலும் சிங்களமக்களும் ஆட்சி



யாளர்களும் இன்புற வேண்டுமென்பதற்காக தமிழீழ மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு விட்டார்கள். இலங்கையில் சிங்கள அரசியல் வாதிகள் இனவாதம் பேசினால் சிங்கள மக்கள் உச்சி குளிர்வார்கள் என்ற மனோபாவத்தில் தான் இலங்கைத்தீவு அபாயகரமான பாதை யில் சென்று கொண்டிருக்கிறது.

சிங்களமக்கள் இன்புற்றால் தேர்தல் வரும் போது தங்களுக்கே வாக்களிப்பார்கள் என்பது தான் நாட்டை முடமாக்கும் முரட்டுச்சிந்தனை யாகும்.

தமிழர்களின் பூர்வீக நிலங்களில் சிங்கள மக்களை குடியமர்த்தி அவர்கள் செல்லும் இடமெல்லாம் புத்தர் சிலைகளை அமைத்தால் சிங்களமக்கள் இன்புறுவார்கள். மற்ற மதத்த வர்கள் துன்புறுவார்கள் என்பதை தேர்தல் வெற்றிகளை குறியாகக்கொண்ட அரசியல் தலைவர்கள் கவலை கொள்வதில்லை.

**இலங்கைத்தீவில் சிங்களமக்களும் ஆட்சியாளர்களும் இன்புற வேண்டுமென்பதற்காக தமிழீழ மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள்.**

உலகம் பூராகவும் இன்றைய அரசியல் என்பது துன்புறுத்தி இன்புறும் அரசியல்தான். ஒருசில நாடுகள் விதிவிலக்காக இருக்கலாம்.

உலக மக்கள் யாவரும் இன்பமாக வாழ வேண்டுமென்றால் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு, கல்வியறிவு வழங்கப் பட்டு அதன்மூலம் அரசியல் விழிப்புணர்வுள்ள மக்களாக வளர்ச்சியடைந்து, தங்களை ஆளக் கூடிய, நேர்மையான, உண்மையான, தகுதி யானவர்களை தேர்வு செய்யும் காலம் வர வேண்டும். இது தற்போதைக்கு சாத்தியமா?...

## நூல்களும் பயில்தலும்

செயலற்றுள்ள மக்களைக் கண்டு நகைப்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதாயின், அத்தகைய புத்தங்களைக் கண்டு நகைப்பதும் ஏற்றுக்கொள்ள இயன்றதே, பயனற்ற பிதற்றலைப் பேசாதே, கேட்காதே, என்று சொல்வது ஒப்புக் கொள்ளப்பட்டதானால், பயனற்ற புத்தங்களைப் படிக்காதே, எழுதாதே என்று கூறுவதும் ஏற்கப்பட இயன்றதாகவே இருக்க வேண்டும்.

அனைத்திலும் அதிகமான கெட்டவற்றைவிட, ஒரு சிறிய நல்லதே மிகச் சிறந்தாகும். இதுவே புத்தகங்களுக்கும் பொருந்தும் உண்மையாகும்.

# வியாபாரத்தில் வெற்றியடைய...

டிலூகா

சிறியதாக ஆரம்பியுங்கள், ஆரம்பிக்காமலே இருப்பதைவிட சிறியதாகத் தொடங்குவது பரவாயில்லை.

சிறிய இலாபத்தில் தொடங்குங்கள்.

யோசனை இல்லாமல் தொடங்காதீர்கள்.

எதிர்காலத்தை மனதில் வைத்தே யோசியுங்கள். அதுதான் வளர்ச்சிக்கு உதவும்.

நம்புங்கள் உங்களையும் உங்கள் செயல்களையும்

தயாரானதுமே சுட்டு விடுங்கள். தயங்கினீர்கள் என்றால் எப்போதுமே சுடமாட்டீர்கள்.

செலவைக் குறையுங்கள்.

எப்போதும் மனதில் வெற்றி எண்ணங்களே ஆக்கிரமிக்கட்டும்.

வியாபாரத்தின் தரத்தை உயர்த்திக் கொண்டே இருங்கள்.

உங்களிடம் வேலை பார்ப்பவர்களை நம்புங்கள்.

இலாபம் முழுவதையும் செலவழித்து விடாதீர்கள்.

ஒவ்வொரு நாளும் புது வாடிக்கையாளரைப் பிடியுங்கள். என்றும் வெற்றியுடன் செயல்படுங்கள்.

முயற்சியை விடும்போதுதான் தோல்வியடைகிறீர்கள்.

வியாபாரத்தில் நல்ல பேரைச் சம்பாதிப்பது முக்கியம்.

வாய்ப்புக்கள் யாருக்காகவும் காத்திருக்காது. வரும்போது தாவிப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

இந்தப் பதினைந்து விதிகளையும் அனுபவ பூர்வமாக உணர்ந்த வெற்றி விதிகள் என்கிறார் டிலூகா. உங்கள் வெற்றிக்கும் இவற்றைப் பின்பற்றிப்பாருங்களேன்.

## நூல்களும் பயில்தலும்

அனைத்தையும் படிக்க வேண்டும்மென்பது உண்மையில் தேவையற்றது ஆகும். உனது கேள்விகளுக்கு விடையளிக்கும் புத்தகங்களை மட்டுமே படி.

கெட்ட புத்தங்கள் பயனற்ற புத்தங்களைவிட இழிவானவை, அவை தீங்கு நிறைந்தவை, அனைத்துக் காலங்களின், நாடுகளின் மிகச் சிறந்த எழுத்தாளர்களின் புத்தகங்களை முதலில் படிக்க முயற்சி செய்!

# அறிவோம் அறிவியல்

ஒரு மனிதன் ஒரு நிமிடத்தில் சுவாசிக்கும் காற்றின் அளவு 15.5 லிட்டர் ஆகும்.

பி1 வைட்டமின் குறைபாடே மூளை வளர்ச்சி குறைவிற்குக் காரணம்.

மனித மூளையில் 1200கோடி நரம்பு செல்கள் உள்ளன.

மனிதத் தலையில் மொத்தம் 22 எலும்புகள் உள்ளன.

வைட்டமின் ஈ குறைவினால் ஆண்மைக் குறைவு ஏற்படுகிறது.

மனிதனின் இதயத்துடிப்பு வருடத்திற்கு 32000 குறைகிறது.

ஆண் நட்சித்திர மீன்கள் பெண் மீனாக மாறுகின்றன.

ஒட்டகத்திற்கு மூன்று வயிறுகள் உள்ளன.

மிகப்பெரிய அணுகுண்டை வெடித்த நாடு முன்னாள் சோவியத் ரஸ்யா (62-90 மெ.டன்)

சூரியனிடமிருந்து வெகு தொலைவில் உள்ள கோள் ஃபுளுட்டோ.

— ப்ரியா ராமசாமி —

## மணிமொழிகள்

மானிடர்கள் என்னை மதிக்கவில்லை என்பதற்காகதான் மனம் வருந்தவில்லை: அவர்களை நான் அறியவில்லை என்பதற்காகவே வருந்துகிறேன்.

வாழ்க்கையையே நீ தெரிந்து கொள்ளாமல் இருக்கும் போது, மரணத்தைப் பற்றி எப்படி அறிவாய்?

## கண்ணாடி

அழகற்ற மனிதன் ஒருவன் தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்தான். உங்களைக் காண உங்களுக்கே பிடிக்காதே! நீங்கள் ஏன் உங்களை கண்ணாடியில் பார்க்கிறீர்கள்? என்று நான் அவனைக் கேட்டேன்.

அழகற்ற மனிதன் சொன்னான் ஐயா! அழியாத அரசியல் சட்டம் 1789 இன் படி சட்டத்தின் முன் எல்லா மனிதர்களும் சமம் அதனால் மகிழ்ச்சியோடு அல்லது வெறுப்போடு என்னைக் கண்ணாடியில் பார்த்துக்கொள்ளும் உரிமை எனக்குண்டு. அது என் மனச்சான்றை மட்டுமே பொறுத்தது.

நல்லறிவின் படி நோக்கினால் ஐயமின்றி நான் நியாயம் உடையவன். ஆனால் சட்டப்படி அவன் சொன்னதில் தவறில்லை.


— பொதெலேர் —

# நெஞ்சைப்பிழியும் போராளிகளின் நினைவுகள்

புங்கையூர் நிலவன்

வணக்கவொளியின் மற்றைய இதழுடன் போராளிகளின் நினைவு தாங்கிய, நெஞ்சைப் பிழியும் போராளிகளின் நினைவுகள் எனும் தொடருடன் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகி றேன். எனது நெஞ்சச் சுமையை இறக்கி வைக்கும் தொடராகவே இதனை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறேன். ஏதேனும் பிழைகள் இருப்பின் மன்னித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். காரணம் இதில் எழுதும் விடயங்கள் அனைத்தும் எனது சிறுபிராயத்தில் இருந்து இன்றுவரை எனது உள்ளத்தில் பதிந்த உண்மைப் பதிவுகளும், உள்ளக் குமுறல்களும் என்பதை மீண்டும் ஞாபகப் படுத்துகிறேன்.

புறநானூறு எனும் இலக்கியத்தையே புரட்டி போட்ட, ஆயிரம் ஆயிரமாம், வேங்கைகளை ஈன்ற மண் எமது தாயகம். ஒவ்வொரு தமிழ் தாயும், தலை நிமிர்ந்து மார்தட்டி நிற்கவேணும் எனது பிள்ளை மாவீரர் என்று. எத்தனை வரலாறுகள் தமிழனுக்கு இருக்கட்டும் விடுங் கள். இன்று தமிழர் என்று சொன்னால் தெரியாத இடமே இருக்காது. உலகமே அறிய வைத்தவர்கள் எம் போராளிகள் என்பதை யாரும் இல்லை என்று சொல்லமுடியாது. இவர்கள் படைத்த வரலாறுதான் எல்லா வற்றையும் விடமேலான வரலாறு. பெரிய வல்லரசு நாடுகள் கூட எமது வேங்கைகளின் போர்யுத்திகளைக் கையாண்டு தமது படை களுக்கு பயிற்சி அளிக்கிறது என்றால் அது உண்மையிலேயே நாம் பெருமைப்பட வேண் டிய விடயம். அண்மைக் காலத்தில் பத்திரிகை களில் இது வெளிவந்து இருந்தது எல்லோரும் பார்த்திருப்பீர்கள்.



அடுத்து எனது சிறு பிராயத்தில் நான் அனுபவித்த துயரமான சம்பவம் என்று சொன்னால் குமுதனி படகில் நடந்தேறிய படுகொலை. அதாவது 7 வயது நிரம்பிய சிறுவனாக குறிகாட்டுவான் எனும் இறங்கு துறையுடன் கூடிய இடத்திலே தான் நான் வாழ்ந்து வந்தேன். அந்த கால கட்டத்தில் தான் 83ம் ஆண்டு கலவரம் நடைபெற்று கொண்டிருந்த காலகட்டம். எனது தாயார் பல மரணவீடுகளுக்கு போய் வந்து கதைப்பது எனது காதில் கேட்கும். குழியாப்பிட்டியில் வெட்டி கொலை செய்து போட்டாங்க பாவம், குடும்பம் கிடந்து கதறுகினம் தாங்க முடியல, அந்த காலகட்டத்தில் யாராவது எம்மை காப்பாற்றுவாங்களா? என்ற ஏக்கம் எம் இனத்தின் மத்தியில், அப்படி இருக்க ஒரு நாள் 'குமுதினி படகு' வந்து சேரவேண்டிய நேரத்துக்கு இறங்கு துறைக்கு வரவில்லை. எல்லோரதும் கவனமும், குமுதினி பக்கம் திரும்பியது. படகானது ஓட்டுனர் இல்லாதது போல் அங்கும் இங்குமாக அலைந்து

திரிந்து கொண்டு இருப்பதை கண்டவர்கள் பின்பு வேறு ஒரு படகிலே போய் படகை பார்த்தபோதுதான் அங்கே பேரதிர்ச்சி. குமு தினி குருதி வெள்ளத்தை சுமந்து நிற்கிறாள்




என்பது தெரிய வந்தது! எத்தனை யுவதிகள் எத்தனை பெரியவர்கள் என சொல்ல முடியாத சோகங்கள் குற்றுயிராக கிடக்கும் சிலரை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்து சென்று காப்பாற்றினார்கள். அதில் ஒரு குழந் தையும் அடங்கும். அதாவது இரட்டைக் குழந்தைகள் அதில் ஒன்று தாயும் மற்றையது அம்மம்மாவும் வைத்திருந்தாக கூறப்பட்டது. தாய் வைத்திருந்த குழந்தைக்கு பெரிதாக காயம் இருக்கவில்லை. காரணம் அக்குழந்தை க்கு விழுந்த ஒவ்வொரு வெட்டுகளையும் தாயே தாங்கி இருக்கிறாள் என்பது தான் உண்மை.

இப்படியான பல அவலங்களைக் கண்டு எனது மனம் யாராவது எமக்கு பாதுகாப்பு தரமாட்டார் களா? என்று ஏங்கியது. அந்த ஏக்கத்துக்கு கிடைத்த பாதுகாப்பரண்களாக நான் எனது போராளிகளை மதித்தேன். ஏன் இதனை சொன்னேன் என்றால் ஒருவன் நோய்வாய்பட்டு இருக்கும் போது தான் தெரியும் வைத்தியரின் அருமை. அதே போன்று பசியின்போதுதான் தெரியும் உணவின் அருமை. அதேபோன்று தான் நாதியற்று தவித்த எம் இனத்துக்கு கிடைத்த வரப்பிரசாதமாகவே நான் போராளி களை மதிக்கிறேன்.

அப்படியான காலத்தில் எமது கிராமம் 32குடிசைகளைக் கொண்ட சிறிய தீவு. எனவே எப்போது காடையர்கள் வருவார்கள். எம்மை வெட்டுவார்கள் என்று பயந்து நித்திரையே கொள்ள மாட்டோம். அப்போது எமது போராளிகள் எமக்கு பாதுகாப்பு தருவதாக கூறினார்கள். பாதுகாப்பு எவ்வாறு என்றால் அப்போது போராளிகளுக்கு ஆட்பலம், ஆயுதபாலம் இல்லாத காலகட்டம் ஒன்று இரண்டு கிரனையிட்டுகள் கை வசம் இருக்கும். அதனை கொண்டு கரையோரங்க ளில் இரவு காவலுக்கு நிற்பதாகவும் இராணு வம் கரையிறங்க முற்பாட்டால் தாம் கிரனை ட்டை வெடிக்க வைப்பதாகவும் நீங்கள் பாதுகாப்பான இடத்துக்கு தப்பி செல்லுங்கள். இப்படித்தான் ஆரம்பத்தில் எம்மை காத்தார் கள். அப்படி பல சமயங்களில் இராணுவம் கடற்படைப் படகில் கரையை நெருங்கி வந்து துப்பாக்கி பிரயோகம் செய்ய எம்மவர் கிரனை ட்டை வெடிக்க வைத்து, நாம் நடுச்சாமத்தில் குடல்தெறிக்க ஒடிய நாட்களும் உண்டு. ஆம் அன்று தொட்டு தூக்கம் வரவேணும் என்றால் எம் போராளிகள் காவலுக்கு நிற்கிறார்கள் என்று என் அம்மா சொன்னால்தான்.

இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். மழை என்றும் குளிரென்றும் பார்க்காமல் எம்மை காத்த காவல்தெய்வங்கள் எங்கே? அதன் வலிமை இல்லாமையால் எம்மினம் படும் அவலமும் எல்லோரும் அறிந்ததே. சிலர் தெரிந்தும் சொல்லமுடியாமல் இருக்கின்றார் கள். உறங்காத கண்மணிகளாக தாங்கள் விழித்திருந்து எம்மை தூங்க வைத்த எம் தியாகிகளை எப்படி மறப்பது? எனது சிறுவயதி லிருந்து என் மனதில் அவர்களது தியாகம் பசுமரத்தாணிபோல் பதிந்து விட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வர்கள் யாருமே நின்மதி இன்றி இருந்தோம்

என்று சொல்ல முடியாது. விமானத்தாக்குதலுக்கும் எறிகணைத்தாக்குதலுக்கும் பாதுகாப்பான பதுங்குழி இருந்தால் போதும். யாராவது வந்து எம்மைத் தாக்குவார்கள், அடிப்பார்கள், எம் பெண்களின் கற்பை சூறையாடுவார்கள் என்று பயந்தது உண்டா? இங்குதான் அவர்களது அருமை தெரிகிறது. பணம், பொருள் இருந்தால் களவும், தனிவழி போனால் காணாமல் போதலும், தனித்து இருந்தால் கற்புக்கு ஆபத்து அதாவது பாலியல் வல்லுறவும் என்று நின்மதி கெட்டு வாழும் எம்மக்கள் வாழ்க்கை நிலை மாறி சமுதாயசீர்கேடு தலைவிரித்து தாண்டவம் ஆடுகிறது. இந் நிலைமைக்கு 'பெரிசுகள்' என்று செல்லமாக சொல்லும் விடுதலைப்புலி போராளிகள் எம்முடன் இல்லாததே காரணம்.

***அரசியல், நீதி, நிர்வாகம் என்று கட்டுக்கோப்போடு, பொருண்மியத்திலும் மேம்பட எம்மை கட்டிக் காத்தவர்கள் எம் மதிப்பிற்குரிய போராளிகளே.***

ஆண்டாண்டு காலம் பெருமையுடன் வாழ்ந்த எமக்கு இன்று என்ன நிலைமை? பாடசாலை படிப்புக்காக யாழ்கொக்குவிலில் தலையாழி எனும் பகுதியில் வாழ்ந்து வரும் காலத்தில் இந்திய இராணுவம் எம்மண்ணின் அமைதி காக்கும் அமைதிப்படையாக வந்து அட்டூளியம் செய்த காலம். மறைந்து இருந்து இயங்கி வந்தபோது கூட எம்மினத்தின் ஒவ்வொரு துன்பங்களில் பங்கு கொண்டு இராணுவத்தின் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுத்து வந்தனர். ஆம் எத்தனை அட்டூளியங்கள். யாழ் பிரம்படி எனும் இடத்தில் எத்தனை மக்களை இராணுவம் சுட்டு கொலை செய்து கனரக பீரங்கி வண்டிகளில் போட்டு நெரித்து கொலை செய்தது ஆண்டாண்டு சென்றாலும் நாம் மறக்க முடியுமா? ஆனாலும் துரோகதனமாக நம்மவர் காட்டி கொடுத்து போராளிகள் காவியமான வரலாறுகளும் பல நடந்தேறி இருக்கிறது.

ஒன்று மட்டும் சொல்லுகிறேன் வீரகாவியமானவர்கள் சாகவில்லை, அவர்கள் வித்தானவர்கள். என்றோ ஒரு நாள் வேர்விடுவார்கள். விழுதெறிவார்கள். எமக்கும் எமது மண்ணுக்கும், நிழல் தரும் பெருவிருட்சமாக எம்முன்னே திகழ்வார்கள் என்பதை மறந்து விட கூடாது. இப்படி வித்தானவர்கள் வேறு யாருமே இல்லை. உங்களின் பிள்ளைகள் என்பதை மனதில் நிறுத்துங்கள். இங்கு எனக்கு ஒரு ஞாபகம் வருகிறது. எனது நண்பன் விடுதலைப் புலியில் இணைந்து விட்டான். அவனது வீட்டுக்குப் போனேன் அம்மா, அப்பா இருவரும் ஒரே அழுகையும் சாப்பாடும் இன்றி இருந்தனர். அங்கு வந்த ஒருவர் என்ன சொல்லிக் கொண்டிருந்தார் தெரியுமா? குறுக்கால போனவங்கள் உன்ர பிள்ளையையும் சொல்லிக் கூட்டிக் கொண்டு போயிட்டாங்களா? நாசமா போவார் என்று திட்டினார். அதே வேளை நோய்வாய்பட்டு இறந்து இருந்தால் சொல்லுவார்கள், என்ன செய்வது? இவ்வளவு தான் ஆயுளாக்கும் என்பார்கள். அன்னியரின் கண்முன்னே சித்திரவதை செய்து அடித்தும், கற்பழித்தும், கொலைசெய்தபின்பு என்ன செய்வார்கள். கையை கட்டிக் கொண்டு விம்மி அழுதார்களே தவிர என்னசெய்ய முடிந்தது?, முடிகிறது. ஆம் அவ்வாறு விடுதலைப்புலியாக எம் இனத்தின் காப்பரணாக நின்று எம்மை நின்மதியாக வாழ போராடிய வீரவேங்கைகளையும் ஒரு தமிழ் தாய்தானே ஈன்றெடுத்தாள். எந்த தாயும் தன் பிள்ளையின் உயிருக்கு ஆபத்து என்றால் விடுவாளா? எத்தனை தாய்தான் எத்தனை வீரர்களை ஈன்று நாட்டுக்காக அனுப்பி இன்று வீரகாவியம் படைத்து இன்னும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதை எவருமே மறந்துவிடக்கூடாது.

ஏன் இதை கூறுகிறேன் என்றால் காலம் காலமாக எமது இனத்தின் மீது விழுந்த ஒவ்வொரு அடிகளுமே எமக்கு முத்தான தலைவரையும், போராளிகளையும் உருவாக வழி அமைத்தது. எமது உறவுகள் காலம் காலமாக அடிமைகளாக இருக்கக்கூடாது. நாம் நிமிர்ந்து வாழ வேண்டும் என்றே களமாடினார் கள். அன்று வீரகாவியமானார்கள். ஒவ்வொரு அடி மண்ணாக எதிரியின் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டார்கள். ஒவ்வொரு அடி மண்ணும் மீட்கப் படும் போது எத்தனை எம் ஈழத்தாயின் குழந்தைகள் வித்தாகினார்கள். எத்தனை பொதுமக்கள் இறந்தார்கள். இந்த தியாகிகளின் தியாகம் ஒருபோதும் வீண்போகாது.

ஆம் ஆயிரம் ஆயிரம் வேங்கைகளின் குருதி யில் நனைந்து சிவந்ததுதான் தமிழர் தேசம். தமிழீழத் தாயானவள் தன் குழந்தையின் உடலிலிருந்து ஒரு துளி குருதி வெளியேறி னாலே தாங்மாட்டாள். துடித்துப்போவாள். இது தாய்மையடைந்தவர்களுக்கும், தாய்மையன்புள் ளம் படைத்த அனைவருக்கும் தெரியும். ஆனால் பல சந்தர்ப்பங்களில் பார்த்து பார்த்து

அழுதிருக்கிறேன். சந்தர்ப்பம் சொல்லியே ஆகவேணும். சூரியக்கதிர் ஒன்று இராணுவ நடவடிக்கை, உக்கிரமசமர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. காயப்பட்ட போராளிகள் வந்தவண்ணமிருக்கின்றனர். நான் போராளி களை பராமரிப்பதற்காக, யாழ் போதனா வைத்தியசாலைக்கு அடிக்கடி போவது மாதிரி அன்றும் போனேன். அங்கு காயப்பட்டவர்கள் அதிகமாகி படுக்கைகள் போதாமல் இருக்கும் நிலைமை அது. அப்போது நோயாளியை படுக்க வைத்து தள்ளி செல்லும் வண்டி யொன்று, அதிதீவிர சிகிச்சை அறைக்கு பக்கதில் விட்டு மூடிவிடப்பட்டிருந்தது. இரத்தம் கசிந்த வண்ணமிருந்தது. ஓடி போய் திறந்துபார்த்தேன். என்னால் தாங்கவே முடிய வில்லை. அதுவும் ஒரு போராளி எனக்கு நன்கு அறிமுகமானவர். இதற்கு முன்பும் பல சண்டைகளில் விழுப்புண்ணடைந்து குணமடை ந்தவர். சொல்லுவார் நான் எத்தனை தடவை களும் விழுப்புண்ணடையலாம் என் பெற்ற தாயோ, உறவுகளோ, குருதி சிந்துவதை தாங்கமாட்டேன் என்று சொன்ன அந்த மண்பற்றும் மக்கள் மீதும் பற்றுக்கொண்ட அன்புள்ளம் குருதிதோய்ந்து மூச்சு பேச்சற்று வீரவேங்கையாக கிடப்பதை எப்படி தாங்க முடியும். இதை எழுதும்போதே என் நெஞ்சு கனக்கிறது தாங்கவே முடியவில்லை.

ஆம் ஈழத்தின் ஒவ்வொரு போராளியும் தன் தாய் சகோதரர் போன்றே அனைத்து தமிழ் உறவுகளையும் மதித்தனர் என்பதை ஒவ்வொ ருவரும் மறந்துவிட முடியாது. மறக்கவும் கூடாது. தன் இறுதிமூச்சு விடும்போது என்ன நினைத்திருப்பார்கள்? எமக்கென்றுஒரு தேசம் அமைப்பதற்காகவே நாம் வித்தாகிறோம்.

எமது தேசத்தில் எமது உறவுகள் சந்தோசமாக, சுதந்திரமாக சுதந்திரக்காற்றை சுவாசிப்பார்கள் என்ற நம்பிக்கையோடுதான் அந்த அளப்பரிய தியாகத்தை செய்தார்கள். எனவே எமக்கு ஒரு தார்மீக கடமை இருக்கிறது. அவர்களை நாம் என்றுமே மறக்கக்கூடாது. கார்த்திகை திங்க ளில் அவர்களது நினைவுடனே அவர்களை போற்றுவோம். இன்னும்பல சோகமான நினை வுடனே அடுத்த இதழுடன் சந்திக்கும்வரை காத்திருக்கிறேன்.


**தொடரும்...**

# முன்னோர் காலம் மறுபடியும் வாராதா?

திருபாபரணன்

அந்தப் பொழுது சாய்ந்த வேளையில், ஆங்காங்கே விளக்குகள் எரியத்தொடங்கிய ரம்மியமான நேரம், தஞ்சைப் பெரிய கோயிலின் அழகிய கோபுரங்களும் மண்டபங்களும் விளக் கொளியில் என்னை பல நூற்றாண்டுகள் பின்நோக்கி நகர்த்திய வண்ணம் இருந்தது.

உயரே அமைக்கப்பட்ட அந்த கல்மேடையில், பரந்த புல்வெளியில், சாய்ந்து, வானத்தில் ஒளிர்ந்த நட்சத்திரங்களூடே, மிளிர்ந்த அழகிய நிலாவையும், பக்கவாட்டிலே இருண்ட கோபுரங் களும், ஒரு புறம் நிலவொளியின் ஓரப்பார்வை யில் பளிச்சிட, அத்தனை அழகிலும் மூழ்கிப் போயிருந்தோம் நானும் எனது நண்பனும்.



கலைச்செழுமையில், கற்பனை வளத்தில், வானுயர்ந்த கோபுரமும், ரசித்து ரசித்து செதுக் கிய சிற்பங்களும், தமிழனின் அறிவை, ஆற்ற லை, கலைமேதமையை உலகுக்கு பறைசாற் றிக்கொண்டிருக்கிறது. 11ஆம் நூற்றாண்டில், இந்தக்கோயிலைக் கட்டிய முதலாம் ராஜராஜ சோழமன்னனின் கம்பீரத்தோடு நடுவே வந்து குந்தியிருக்கிறது பிரமாண்டமான நந்தி. (இது நாளுக்கு நாள் வளர்ந்து வருவதாக நம்பப் படுகிறது). இந்தக் கோயிலின் சுற்று வட்டார த்தில் எங்கும் மலையோ குன்றுகளோ தென்பட் டிராத நிலையில், இவ்வளவு பெரியதொரு கோயிலை எப்படிக் கட்டினார்கள் என்று மாபெரும் அதிசயமாகவே பார்க்கப்படுகிறது.

கோபுரத்தின் நடுவே தரையிலிருந்து சற்று

அங்கே வெளி ஊர் பார்வையாளர்கள் தவிர, வேறும் பலர், அருகாமையில் வசிப்பவர்கள் அங்கு வந்திருந்து அந்த எழிலை ரசிப்பதையும் காணும் போது, இதுதான் சொர்க்கலோகமோ என்று எண்ணும் அளவிற்கு சுவாசத்திற்கு இதமான காற்றுடன் வீசிய அந்த மாலைப் பொழுது மிகவும் அற்புதமாக காட்சியளித்தது. எந்தவொரு ரசனையும் இல்லாதவன் கூட, அந்த இடத்தில் இருந்திருப்பானேயானால் அவனும் ஒரு கலைஞனாக மாறியிருப்பான். அவ்வளவு கொள்ளை அழகு! நினைத்துப் பார்ப்பதற்கும் வியந்துபோவற்கும் எத்தனை ஆயிரம் விசயங்கள்!

இப்போதே இப்படியென்றால் இக்கோயிலை உருவாக்கியபோதும், அதன் காலங்களிலும்

இதன் அழகு எப்படி இருந்திருக்கும்! அந்தக் காலத்தில் நான் பிறக்காமல் போய்விட்டேனே! என்ற எண்ணமும் இடையிடையே எனக்குள் ஓடிக்கொண்டேயிருந்தது. இது எப்பவுமே அடிக்கடி என்னுள் தோன்றும் விடயம்தான்.

மின்விளக்கில்லாத நிலவொளியும், யானைகளின் மணியோசையும், குதிரைகளின் குழம்பொலிச் சத்தமும், ரதங்களின் சக்கரவொலியும், சிற்பிகளின் உளியோசையும்,இளநங்கைகளின் காற்சதங்கைகளின் ஒலியும், இசைகேட்கும் தர்பாரும், கவிபாடும் கவிகளும், ஒங்கியொலிக்கும் கட்டளைகளும், பார்க்கப்பார்க தீராத ஆசையைத்தூண்டும் கலை வடிவங்களை தாங்கி நிற்கும் கோயில்களும், அரண்மனைகளும், அந்தப்புரத்தின் மயக்கும் அழகும், மங்கையரின் காதல் சொட்டும் நளின விழிப் பார்வையும் என் கண்முன்னே தோன்றித் தோன்றி கலைந்து போகும் விடயங்கள்.

இப்போது எங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்? எல்லாம் இயந்திரமயமாகிவிட்டது. வளர்த்த கலையை காப்பாற்றுவதே பெரும்பாடாகிவிட்டது. இதில் எங்கே படைப்புக்களை உருவாக்குவது? கலைகளால்தானே பண்பாடுகளை வளர்ப்பது, மொழியைக்காப்பது இவைகளை இழந்தால் எப்படி நம் சமூகம் நிலைக்கும்? இப்போதுள்ள இயந்திரமயத்தில் எல்லாமே நசுங்கிவிடுமோ? நாமே நசுக்குவது ஒரு பக்கம், நசுக்கப்படுவது ஒரு பக்கம் என இப்படியாக தமிழன் வாழ்வு தொலைகிறதே என்ற வருத்தம் எனக்குள் ஒரு பக்கம்.

இயற்கையோடு ஒன்றிவாழ்ந்த காலம் எங்கே? பசுமையான வயல்களும், சூடு மிதிக்கும் யானைகளும், அங்கே பணிபுரியும் காளையர்க்கு உணவளிக்கும் மங்கையரும், செழிப்பான சோலைகளும், அங்கே கொஞ்சிக்குலாவும் பறவைகளின் ஓசைகளும், வண்டினங்களின் ரீங்காரமும், தூய ஓடைகளும், பாய்ந்தோடும் நதிகளும், மண்வீதிகளும், ஓங்கி வளர்ந்த ஆலமர நிழல்களும், ஆங்காங்கே இளைப்பாறும் பாதசாரிகளும், ஓலைக்குடிசைகளும், அதன் மேல் விழும் மழைத்தூறல் ஓசையும், வீதியிலும் மண்முற்றத்திலும் படர்ந்தோடும் மழைநீர் எழிலும், அங்கே மினுமினுத்து ஓடும் சிறு மீன் இனங்களும், ஓரத்திலே செழித்துப் பூக்கும் சிறு வண்ணமலர்க் கூட்டங்களும், அங்கே கால்பதித்து ஓடம் விடும் சின்னஞ் சிறார்களும் ஆகா! இப்படி எத்தனை எத்தனை அழகுகள் அத்தனையும் இழந்தோம். இன்னும் என்னவெல்லாம் இழக்கப்போகிறோம்?

சிந்தனை வயப்பட்டிருந்த என்னை 'அண்ணா ஊதுவத்தி வாங்குங்கள்' என்ற ஒரு சிறுவனொருவனின் குரல் மீட்டெடுத்தது. அந்தச் சிறுவன் ஒன்பது அல்லது பத்து வயது மதிக்கத் தக்கவன். அவனருகில் அவன் தங்கையும் நின்றிருந்தாள். இருவர் கைகளிலும் விற்பதற்காக சில ஊதுவத்திப்பெட்டிகள். அவர்களிடம் சிறிது பேச்சைக்கொடுத்தோம் நானும் எனது நண்பனும். அவன் பள்ளியில் படித்துக்கொண்டிருப்பதாகவும், மாலை வேளையில் இந்த வியாபாரத்தில் ஈடுபடுவதாகவும் கூறினான். நான் அவனிடம் இரண்டு பத்து ரூபாய்களை கொடுத்துவிட்டு இதை வைத்துக்கொள். எனக்கு ஊதுவத்தி வேண்டாம். அதை நீ வேறு யாருக்காவது விற்றுவிடு? என்றேன். அவனோ அதை ஏற்கவில்லை. மறுத்து விட்டான். அண்ணா! இதை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். அப்படி நீங்கள் இதை பெற்றுக்கொண்டால்தான் காசை நானும் வாங்குவேன்? என்றான். நானும் பிடிவாதமாக மறுக்க, அவனும் அதை ஏற்க மறுத்தான். பிடிவாதமாக இருந்தார்கள் அவனும் அவன் தங்கையும். நானும் எனது நண்பனும் பிரமித்து நின்றோம். இறுதியில் அந்தப்பணத்திற்கான சில ஊதுவத்திப் பெட்டிகளை பெற்றுக்கொண்

டோம். அதன் பிறகே அவர்கள் சந்தோசமாக நகர்ந்தார்கள்.

இப்போது இதை நினைக்கையிலும், என் உடல் சிலிர்க்கிறது! என்ன ஒரு பக்குவம்! பணத்திற்காக அலையும் இந்த உலகில், அந்தச் சிறுவர்கள் அதை எப்படிக் கணித்துள்ளார்கள்! எப்படி வளர்க்கப்பட்டுள் ளார்கள்! இவர்கள் ஞானக்குழநதைகள் அல்லவா?

அறிவை மயக்கி, ஆசைகளில் திளைத்து, அன்பைத் தொலைத்து, அல்லும் பகலும் உளைந்து, மாயையில் லயித்து, பணமே எல்லாமும் என மாயும் இவ்வுலகில் மானுடம் இன்னும் சாகவில்லை என்பது பளிச்சிட்டது. தமிழனால் அது உயிர் பெற்றுக் கொண்டே யிருக்கும். அது எங்கும் ஒளிபெறவேண்டும் என்பதுதான் நம் கனவு.

நானும் எனது நண்பனும் இருள் சூழ்ந்த சாலையில் ஒளிதேடிப் பயணிப்பவர்கள் போல் நம் இருப்பிடம் நோக்கி நகர்ந்து கொண்டிருந் தோம். அவ்வேளையில் நான் எழுதிய பாடலொன்றின் வரிகள் நினைவுக்கு வந்தது.

தக திகு எனும் இருளில் நான் தனியாக
நுழைகின்றேன்.
தக திகு என மனம் இருந்தும் ஒளி எங்கோ
தெரிகிறதே.

தெரிகிறதே மனதெங்கும்
ஒளிர்கிறதே
ஏன் இது ஏன்
என்னுள்ளே நம்பிக்கை

# இப்படியும் ஒரு மனிதனா...?

பா.தேனிசன்

எழுபத்தியொரு வயதில் முப்பதாவது பட்டத்தை பெற்றுக்கொள்ளப் போகின்றார் ஒரு அமெரி க்கர். படிப்பதற்கென்றே பிறந்தவர் போல் இருக்கின்றார்.

நாங்கள் ஒரு பட்டத்தை பெறுவதற்கே தலையை உடைக்கின்றோம். இவரால் எப்படி முடிகின்றது? நம்பமுடியவில்லை. ஆனால் உண்மை. இதை நான் எழுதும்போது இந்த அமெரிக்க தாத்தா மேலும் இன்னொரு பட்டத்தை பெற்றுக்கொண்டிருப்பார். இவர் தனது வாழ்க்கை முழுவதையும் படிப்பிற்காக அர்பணித்துள்ளார். இவரது மனைவியும் குறைந்தவரல்ல. கணவனுக்கு உதவியாக இருப்பதோடு இவரும் ஏழு பட்டங்களை பெற்றுள்ளார்.(நல்ல சோடிப்பொருத்தம்). இந்த அமெரிக்கர் தனது பட்டப்படிப்பை முடிக்கும் நோக்கில் சிறிய வேலைகள் செய்து படித்து வந்தார். மேலும் படித்து முப்பத்தைந்து பட்டங்கள் பெற வேண்டுமென்பதுதான் இவரின் கனவு. கணக்குப் பார்த்தால் எண்பது வயதுக்குமேல் ஆகிவிடும். இந்தப் படிப்புக் கிழவரிடமிருந்து கல்விக்கு வயதில்லை என்ப தையும் கல்விக்காக இப்படி கடினமாக உழைக்க முடியுமென்பதையும் கற்றுக் கொள்வோம்.

# குர்தியரும் ஈழத்தமிழரும் – இதுதான் தலைவிதியா?

வி.ரி.தமிழ்மாறன்

Turky என்ற பதத்தை தமிழில் துருக்கி என்கிறோம். turks மக்களைத் துருக்கியர் என்கிறோம். எனவே Kurds என்ற பதத்தையும் தமிழில் குர்தியர் என்று அழைப்பதே பொருத்தம். நாளை குர்திஷ்தான் நாடு உருவானாலும் குர்தியர் என்ற பதம் (இனத்தைக் குறிப்பதால்) மாறிவிட நியாயமில்லை. தமிழில் குர்திஷ் மக்கள் என்று சில பத்திரிகைகள் எழுதிவருகின்றன. ஆனால் அம்மக்களுக்கு முறையான அடையாளத்தை வழங்க மறுப்பதாக இது அமையும் என்பதால் குர்தியர் என்று நாம் அழைப்பதே அவர்களது தனித்துவத்தைப் பேணுவதாக இருக்கும்.

யார் இந்தக் குர்தியர்? ஏன் இவர்கள் அண்மைக்காலத்தில் அதிகம் பிரபல்யம் பெறுகிறார்கள்? இவர்களுக்கும் ஈழத்தமிழர்களது அரசியலுக்கும் என்ன ஒற்றுமை என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். குவைத் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்பினைத் தொடர்ந்து ஏற்பட்ட மத்திய கிழக்கு யுத்தத்தினால் குர்தியர் பிரச்சினை தற்போது முன்னணிக்கு வந்துள்ளது. குர்தியரின் பாதுகாப்புக்கென தற்போது ஈராக்கின் வடபுலத்தே அமெரிக்கப் படைகள் இன்னமும் நிலைகொண்டிருப்பதை நாம் அறிவோம். குர்தியர் கொடுமைகளுக்குள்ளாக்கப்படுவது ஈராக்கில் மட்டும்தானா என்பதை ஆராயப்புகின் சர்வதேச அரசியலின் அசிங்கமான உண்மைகள் பல வெளிச்சத்துக்கு வருவது தவிர்க்க முடியாதாகிவிடும். காலனித்துவ அரசியலாலும் பிராந்திய ஆதிக்கத்தினாலும் எப்படி ஈழத் தமிழர் பிரச்சினை சிக்கலாக்கப்பட்டதோ அதேபோன்று, சிக்கலில் தவிக்கும் ஒரு சிறுபான்மையினமே குர்திய இனமாகும். குர்தியரது இன்றைய நிலைமை ஏற்பட்டது என்பதை முறையாகக் கிரகித்திருந்தால் ஈழத் தமிழர் போராட்டமும் திசைமாறியிருக்கத் தேவையேற்பட்டிருக்காது







என்பதை இக்கட்டுரையைப் படித்து முடிக்கும் எவருமே ஒப்புக்கொள்ளவே செய்வர். தமது விடுதலைப் போருக்கு அதிக அளவில் அண்டை நாடுகளில் தங்கியிந்தமை, ஒரே இனத்துக்குள்ளேயே சலுகைபெற்ற குழுக்கள் உருவானமை போன்ற நிகழ்வுகளால் குர்தியர் இன்னும் சுதந்திர நாட்டைக் கனவாகவே வைத்திருக்க வேண்டியுள்ளது.

இது வரை குதிதிஷ்தான் போரில் இறந்த

குர்தியரின் தொகையும் ஈழப்போரில் இறந்த தமிழரின் தொகையும் ஏறக்குறைய ஒரேயளவாகும். ஆனாலும் இராணுவ ரீதியில் ஈழப்போர் பெற்ற சில வெற்றிகளை குர்தியர் இன்னமும் ஈட்டவில்லை. ஈழப்போரில் பலியான அரசபடைகளின் எண்ணிக்கை குர்திஷ்தான் போரில் மடிந்த படைகளின் எண்ணிக்கையைவிட அதிகம் என்றே சொல்லலாம். ஆனாலும் மேற்கு நாடுகள் இன்று குர்தியர் பிரச்சினையை முன்னெடுக்கும் அதே வேகத்தை ஈழத் தமிழர் பிரச்சினையில் காட்டவில்லை என்பது வருத்தத்துக்குரியதே. ஆனால் இதற்கான காரணங்களையோ அன்றி அவலங்களையோ நாம் ஒரு போதும் குறைத்து மதிப்பிடக் கூடாது. குர்தியர் இந்தோ- ஐரொப்பிய பாரம்பரியத்தில் வந்த மக்கள் குழுவினர் என வராலற்றாளர் கூறுகின்றனர். மலைப் பிராந்தியங்களிலும் மேட்டு நிலங்களிலும் செறிந்து வாழ்வது இவர்களது இயல்பு. துருக்கி, ஈராக், ஈரான் ஆகிய மூன்று நாடுகளும் சந்திக்கும் மலைப் பிரதேசமே இவர் களது தாயகமாகும். இந்த முக்கூட்டுப் பிரதேசம் கூறுபோடப்படுவதற்கு முன்னால் இப்பகுதியை குர்திஷ்தான் என்றே இவர்கள் பன்னூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அழைத்து வந்தனர். இவர்களது மொழி பாரசீகமொழியோடு தொடர்புடைய ஒன்று. பாரசீக மொழியை திராவிட பாரம்பரியத்தின் பழமைக்கு ஒப்பிடலாம். குர்திய மொழியை தமிழ்மொழியோடு ஒப்பிட்டால் எப்படி தமிழ் மலையாளம் என்ற பிரிவுகள் உள்ளனவோ அதேபோல சிறுசிறு பிரிவுகள் குர்திய மொழியிலும் உண்டு. இந்த வேறுபாடுகள் பேச்சு வழக்கிலேயே அதிகம் தென்படுகின்றன. உலகிலுள்ள குர்தியரின் சரியான எண்ணிக்கை 1987 இன் பின் இதுவரை திட்டமாக வெளியிடப்படவில்லை. ஆயினும் முன்னைய கணக்கெடுப்பின் அடிப்படையில் வைத்து இன்று இவர்களின் எண்ணிக்கையை வருமாறு குறிப்பிடலாம்.

| | |
|---|---|
| துருக்கியில்: | 10 மில்லியன் |
| ஈரானில்: | 5 மில்லியன் |
| ஈராக்கில்: | 3.9 மில்லியன் |
| சிரியாவில்: | 1 மில்லியன் |
| முன்னாள் சோவியத்தில்: 3லட்சம் | |

இவற்றுள் அளவில் மிகச்சிறிய நாடு சிரியா, பெரியது சோவியத் ஆகும். ஆனால் கூடுதலாகக் குர்தியர் வாழ்வதும் இவர்கள் கொடுமைக்கு உள்ளாவதும் துருக்கியில் தான் என்பது அதிகளவில் பிரச்சாரஞ் செய்யப்படாத விடயமொன்று. குர்திஷ்தான் ஒன்று அமைவதானால் அதற்கு இடமளிக்கவேண்டியது முதலில் துருக்கியே ஈரானுக்கு அடுத்தபடியாக ஈராக்கை இவ்விடயத்தில் கட்டாயப்படுத்த வேண்டும். ஆனால் குர்தியரின் நலனுக்கு மேலாக சர்வதேச அரசியல் நடம்புரிவதால் குட்டிநாடான ஈராக்கினை வற்புறுத்தும் பணிகளே முக்கியத்துவம் பெறுகின்றன. காரணமில்லாமவில்லை மேற்கு நாடுகளின் இராணுவ அமைப்பான நேட்டோவில்(வட அத்திலாந்திக் பொருத்தனை அமைப்பு) துருக்கியும் ஒன்றாக இருப்பதால் அது மேற்குலதின் கண்களுக்குத் தெரிவதில்லை. அண்மைய யுத்தத்தில் துருக்கியின் இராணுவத்தளங்கள் மேற்கு நாடுகள் பயன்படுத்தி ஈராத்கைத் தாக்கியமையை அவதானிக்க வேண்டும்.

16ம் நூற்றாண்டளவிலேயே ஒற்றோமன் பாரசீகப் பேரரசுகள் இந்தக் குர்தியரின் பூரண சுயாட்சியை (குழுக்கள் ரீதியில்) அனுமதித்திருந்தார்கள். அதாவது ஒரு வகைச் சிற்றரசு ஆட்சிமுறை இதற்குப் பிரதிபயனாக மலைப் பிராந்தியம் வரை நீண்டிருக்கும் பேரரசின் எல்லைகளின் அமைதியைப் பேணுவதாகக் குர்தியர் உறுதியளித்திருந்தனர். இங்ஙனம் பூரண சுயாட்சி அனுமதிக்கப்பட்டதற்கு காரணம் இந்த இரு பேரரசுகளாலும் குறிப்பிட்ட மலைப்பிராந்தியங்களைக் கட்டுப்

பாட்டில் வைத்திருப்பது நடைமுறைச் சாத்திய மின்மையாக இருந்தமையேயாகும். எனவே குர்தியருக்குச் சொந்தமான பிரதேசங்களும் இருந்தமையை ஒப்புக்கொண்டால் அவர்களுக் குச் சுயநிர்ணய உரிமை தற்போது உண்டென் பது அடுத்த கட்டவாதமாக அமைகிறது.

தமது எல்லைகளைத் தாமே கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை வந்ததன் பின்னர் குர்தியக் குழுக்களின் ஆதரவு தொடர்ந்தும் தமக்குத் தேவையில்லை என்பதை வெளிப்படு த்தும் வகையில் பேரரசுப்படைகள் மலைப் பிராந்தியங்களில் ஊடுருவி எல்லைகளை விஸ்தரித்தன. இங்ஙனமாக முதலாம் உலகப் போரின் முடிவில் ஒற்றோமன் பேரரசு குடைந்தமைக்கப்பட்டபோது குர்தியர் துருக்கி, ஈரான், ஈராக் எனச் சிதறிய நிலையில் தாம் விடப்பட்டிருந்ததை முதன் முலாக உணர்ந்த னர். ஆனாலும் எதிர்கால அபாயங்களை அப்போது அவர்கள் அவ்வளவாக உணர்ந் திருந்ததாகத் தெரியவில்லை.

யுத்தத்துக்குப் பிந்தியதான காலகட்டத்தில் இந்த மூன்று நாடுகளிலும் குர்தியர் வேண்டத் தகாதவர்களாவும் சந்தேகத்துடன் நோக்கப்படு பவர்களாகவும் மாறிவிட்டனர். எல்லாநாடுகளி லுமே சிறுபான்மையினர் என்ற முத்திரையே இவர்களுக்குக் கிடைத்தது. பெருபான்மை யினருடன் ஒத்துப்போக வேண்டும் என்ற உபதேசங்களும் கிடைக்கத் தவறவில்லை. பாரம்பரியமான அவர்களது வாழ்க்கை முறையும் மரபுகளும் அருகத் தொடங்கின. புதிதாக அவர்கள் எந்தெந்த நாடுகளில் காணப்படுகிறார்களோ அந்தந்த நாடுகளின் மொழியைக் கற்குமாறு வற்புறுத்தப்பட்டனர். அவர்கள் துருக்கி பாரசீகம் அல்லது அரபுமொழியை கற்கவேண்டியிருந்தது. தமது குர்திஷ் அடையாளத்தை இழந்து துருக்கிய ஈரானிய அல்லது அராபிய அடையாளத்தை தேசியத்தை ஏற்பதாக இது அமையும். குழுக்களாகவும் பாரம்பரிய சமூக அமைப்பு முறைமையிலும் வாழ்ந்து பழக்கப்பட்ட மக்களு க்கு இது பேரிடரளிப்பதாக அமைந்திருந்தது. இதிலிருந்து ஆரம்பித்ததே குர்தியர் கிளர்ச்சி யாகும்.

குர்தியர் குழுக்களாக வாழ்ந்து பழக்கப்பட்டவர் கள். எனவே சில குழுக்கள் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு நல்கிப் பிரதியுபகாரமாக அற்ப சலுகைகளைப் பெற்றுக்கொண்டன. வேறு சில குழுக்கள் இது அரசாங்கத்தின் அத்து மீறல் எனக் கூறி அடையாளத்தை இழக்கமாட்டோம் என அடம் பிடித்தன.

ஈழத்தமிழர் வரலாற்றில் 1920களின் காலகட்டத்தை இங்கு ஒப்பிடலாம். ஒத்துழை க்கவேண்டும் என்றனர் சிலர். குர்தியரின் ஒற்றுமை சிதறுண்டது. ஆனாலும் அரசாங்கங் களின் கெடுபிடியினால் குர்தியரை மீண்டும் ஒற்றுமைப்படுத்தும் காலமும் வரவே செய்தது. தமது கலாச்சாரம் பாரம்பரியம், பிரதேசம் திட்டமிட்டுச் சீரழிக்கப்படுவதைக் குர்தியர் உணர்ந்தபோது குர்திய தேசியம் என்ற அடையாளம் முன்னரைவிட வலுப்பெறலா யிற்று. இதேவித அனுபவம் ஈழத்தமிழருக்கு 1950 களில் ஏற்பட்டமையை ஞாகப்படுத்திக் கொள்ளுங்கள். இதனைத் தொடர்ந்தே குர்தியர் தமது அடையாளம் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனக் குரலெழுப்பினர். சட்டப்படி யான தமது உரிமைகள் பற்றி அக்கறை காட்டினர். கட்டாயத்தின் பேரில் ஒரினம் உருத்தெரியாமல் அழிக்கப்படமுடியாது எனக் கொதித்தெழுந்துள்ளனர். தாம் ஆட்சி உரிமை யுள்ளவர்கள் என்பதை உலகுக்கு பறைசாற்ற முற்பட்டனர். அதன் எதிரொலியே இன்று நாம் கேட்பதாகும்.

நன்றி.

# நாமார்க்கும் குடியல்லோம்

முனைவர் நா.சி.கமலநாதன்

வந்த இளைஞர்கள் அந்த இருட்டிலும் அங்கே நிற்பவன் தங்கள் நண்பன் தான் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

உக்கிரசிங்கா! நீண்ட நேரம் காத்திருந்திருப்பாய் என்று எண்ணுகின்றேன், வழியில் பல தடங்கல்கள் குறுக்கிட்டு விட்டன. இனி நாங்கள் இந்த இடத்தில் நின்று பேசக்கூடாது. கோவிலில் தங்கும் அடியார் களின் நடமாட்டமும் இருக்கும், கைக்கூலி களும் நடமாடக்கூடும். வா! வயற்கரையில் போயி ருந்து பேசுவோம் என்றான், தலைவன் போன்று தோன்றிய இளைஞன்.

ஓகோ! இவ்வளவு நேரமும் கோவிலடியில் அமர்ந்திருந்த இளைஞன் பெயர் உக்கிர சிங்கன். யார் அவன்? அன்றுவரை யாருக்கும் தெரியாது.

உண்மைதான் இது உகந்த இடமல்ல என்று கூறிய உக்கிரசிங்கன், ஒருதடவை தன்னுடன் பேசியவனுடன் வந்தவர்களை நோட்டம் விட்டான். முகத்தில் திருப்தி தெரிந்தது. ஒரு முறுவலுடன் குதிரையில் பாய்ந்து ஏறினான். குதிரைகள் வயற்கரை செல்லும் நடைவழியில் காட்டினுள் மறைந்தன.

வயற்கரை வந்த இளைஞர்கள் குதிரைகளைக் காட்டோரத்தில் கட்டிவிட்டு, வரப்பினுள் நடந்து சென்று ஒரு குளத்தடியை அடைந்தார்கள்.

அந்த வெள்ளிருட்டில் கதிரவனின் பிரிவால் கூம்பிக் கிடந்த தாமரைகள் பளிச்செனத் தெரிந்தன.

ஒரு பெருமூச்சு விட்ட உக்கிரசிங்கன், பார்த்தாயா தம்பலேசா? இந்தத் தாமரைகள் கூடத் தலைவனின் பிரிவால் வாடிவிட்டன. தங்கள் தலைவன் நாளை வருவான் என்று தெரிந்திருந்தும் அவனது பிரிவால் வாடி விட்டன. ஆனால், நாங்கள் ஈழத்தமிழர்கள், எத்தனை நீண்ட நெடுங்காலமாக எங்களுக் கொரு தலைமையுமில்லாமல், ஆட்சியுமில்லா மல், அப்படியொரு நிலை எங்களுக்கு இருந்ததா? என்ற வரலாறு கூடத் தெரியாமல், வருகிற போகிற வாள்பிடித்த வேடரெல்லாம் இருக்கிறதையெல்லாம் அள்ளிக் கொண்டு போனாலும் கவலைப்படாமல், வாடாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். என்றைக்குத் தான் விழித்தெழப் போகிறோமோ என்று ஆதங்கத்துடன் கூறினான்.

முதலே, கதிரைமலைச் சிவன்கோவிலடியில் பேசியவன் தான் தம்பலேசன். உக்கிரசிங்க னின் உற்ற நண்பன். உக்கிரசிங்கனுக்குப் பெருமூச்சொன்றைப் பதிலாக்கி விட்டுக் கூறினான்.

உக்கிரசிங்கா! கீரிமலையிலிருந்து கோவிற் கடவை வழியாகத்தான் வரவிருந்தோம். அதற் கிடையில், மாதோட்டத்திலிருந்து சிங்களப்படை வீரர்கள் வருகிறார்கள் என்றும் அவர்கள் இன்றோ நாளையோ கோவிற்கடவையூடாகக் கிரிமலைக்கு வருகிறார்கள் என்றும், அவர் களுடன் புத்தளத்துத் தம்பண்ணன் வருகிறான் என்றும் செய்தி கிடைத்தது. அதனால், நாங்கள் பாதை மாறி கீரிமலையிலிருந்து கரையிறங்கிக் கசாயத்துறை போய், அங்கிருந்து வழுக்கை யாற்றுக் கரைவழியே சுற்றி வந்ததினால்,

தாமதம் ஆகிவிட்டது என்றான் மன்னிப்புக் கேட்கிற பாவனையில்.

சிறிது நேரம் அமைதியுடன் இருந்த உக்கிரசிங்கன், தம்பண்ணன் சிங்களவர்களுடன் வருவது பற்றி யார் சொன்னார்கள் என்றான்.. தம்பலேசன் தன்னுடன் வந்த இன்னொருவனைக் காட்டி, இவன்தான் நீலகண்டன் சொன்னான் என்றான்.

நீலகண்டனை ஏறிட்டு நோக்கிய உக்கிர சிங்கன், நீலகண்டா! இது உண்மையான செய்தியாய் இருக்குமா?

ஆம் நண்பா! இன்று அதிகாலை கோவிற்கடவையிலிருந்து, சங்குவேலிக்கு வெற்றிலை கொண்டுபோன மழவராயர் என்பவர் சொன்னார்.

கந்தரோடைக்கு இன்று தம்பண்ணன் தலைமையில் சிங்களப்படை வருவதாகவும் அகப்பட்டதைக் கொள்ளையடித்துக் கொண்டு போகப் பார்ப்பார்கள் என்றும், அதனால் கந்தரோடைப் பக்கமுள்ள வணிகர்கள் தங்கள் அங்காடிகளில் உள்ள பெறுமதிமிக்க பொருட்களை அகற்றுகிறார்கள் என்றும் சொன்னார்.

வணிகர்களிடம் இருந்து வந்த செய்தியானபடியால் பொய்யாய் இருக்க முடியாது. யாரோ மாதோட்டப் பக்கமிருந்து வந்த மரக்கலக்காரர் சொல்லியிருக்க வேண்டும். தவறாய் இருக்காது என்றான் உக்கிரசிங்கன். அக்கூட்டத்தில் இருந்த இளைஞர்கள் வெகுண்டார்கள். இன்னும் எத்தனை நாளைக்குப் பொறுப்பது? இம்முறை அவர்களைக் கரந்தழிக்க வேண்டும் என்றனர்.

உக்கிரசிங்கன் ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு, நண்பர்களே! வீரம் மட்டும் இருந்தால் போதாது. வீரமிருக்கிற இடத்திலே கூடவே நுழைபுலனும் இருக்கவேண்டும். இல்லாவிட்டால், குறிக்கோளில் வெற்றிகாண முடியாது. நாங்கள் இப்போது தான் தளிர் விட்டிருக்கிறோம். எமது இன்றைய வளர்ச்சி ஒரு காட்டுமிராண்டிப் படையை எதிர்க்கப் போதாது. ஆகவே, நாம் பலம் பெறும்வரை உணர்ச்சிகளுக்கு இடமளிக்காமல், பொறுமையைக் கடைப்பிடித்துத் தானாகவேண்டும். என்றான்.

(பழைய குறிப்பில் கசாத்துறை என அழைக்கப்பட்டுள்ள காங்கேசன்துறை கசாயத்துறையாக இருக்கலாம். அந்நாளில் அப்பகுதி சிறந்த நெசவுத்தொழில் வளர்ந்த இடமாக இருந்துள்ளது. நெசவுத்தொழிலுக்கு வேண்டிய கசாயம் (சாயம்) கழுவினாலும் கழன்று போகாத சாயம் வந்திறங்கிய துறையாக இருக்கலாம்)

## இனமானம்

பன்னு?று ஆண்டுகளாக ஆட்சிமுறை இன்றி, தடியெடுத்தவன் தண்டல்காரன் என்கின்ற மாதிரி, தமிழீழத் தமிழர் ஆட்டிவைக்கப் படுகின்றனர். அவ்வப்போது பாண்டியரும் சோழரும் ஈழத்தின் மீது படையெடுத்தாலும் அவர்களால் தமிழரைக் காப்பாற்ற முடியவில்லை. ஏன்? அவர்களது படையெடுப்புகளில் இனமானம் இல்லை. அரசியல் ஆதிக்கம், போர்வெறி, பொன்னாசை பெண்ணாசை மட்டுமே இருந்தன. படையெடுப்பார்கள் கொள்ளையிடுவார்கள், அகப்பட்ட பெண்களை அடிமைகளாகச் சிறைப்படுத்துவார்கள். முடிந்தவரை அனைத்தையும் செய்துவிட்டுக் கப்பலேறிவிடுவார்கள். இரண்டொருவர் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைகள் செய்தபோதிலும், அவர்களுடைய காலத்தின் பின் நிலைமை தலைகீழாக மாறிவிடுகிறது. இதனால் விளைந்த பலன், சிங்களவர் தங்களைப் பலப்படுத்திக் கொண்டதோடு, வேண்டிய நேரமெல்லாம் திருகோணமலையிலும் புத்தளத்திலும்

மாதோட்டத்திலும் கதிரைமலைப் பக்கமும் அடிக்கடி கொள்ளையடிப்பதே தொழிலாயிற்று. கடந்த திங்கள் கூட முன்னேச்சுரத்தில் கொள்ளை அடிக்கப்பட்டதாக ஒரு செய்தி. நண்பர்கள் அதிர்ந்து போனார்கள். என்ன? முன்னேச்சுரம் கொள்ளையடிக்கப்பட்டதா? உக்கிரசிங்கன் சொன்ன செய்தி இதுவரை அவர்கள் அறியாதது.

தம்பலேசன் கேட்டான். ஏன் உக்கிரா! இதை இன்றுவரை நீ எங்களிடம் சொல்லவில்லை?

தவறாக எண்ணாதே தம்பலேசா, நீங்கள் கொழுந்து விட்டெரியும் இனமானத்தினால் கொந்தளித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களிடம் இவ்வகையான செய்திகளைக் காலமறியாமல் சொல்லக்கூடாது, அது எங்களை அழித்துவிடும்.

நாங்கள் அழிவிற்குப் பயப்படவில்லை. குமுறினான் தம்பலேசன்.

இல்லை நண்பா! நான் எங்களைக் குறிப்பிடவில்லை. முழு இனத்தையும் குறிப்பிடுகிறேன். அஞ்சுவது அஞ்சாமை பேதமை என்று வள்ளுவன் கூறியிருக்கிறான். புத்தளத்தில் இருந்து மாதோட்டம், கீரிமலை, கசா-யத்துறை, பருத்தித்துறை, திருகோணமலை, கொட்டியாரம், தேவன்துறை வரை கரையோரமாகவும் வவுனிக்குளப் பாய்கால் முழுமையும் இரணைமடுவின் வடகீழ்ப் பாகம் முழுவதும் நடுவன்னி முழுவதும் பரந்து வாழ்கிறார்களே தமிழர்கள், எத்தனை வெள்ளம் மக்கள். காலாதிகாலமாக, ஊழிஊழியாக வாழ்கிறார்கள். இராவணனுடன் தொடர்புடைய கோணேசர் கோவிற்காலத்தில் எத்தனை உயர்வுடன் வாழ்ந்தார்கள். குடிதனை நெருக்கிப் பெருக்கமாய் இருந்தது என்று தேவாரம் கூறுகிறது. மாந்தன் தோன்றிய நாள் முதல், மூன்று ஊழிகளால் குமரிக்கண்டம் அழிந்தபோதும், தமிழீழத்தவர்கள் தப்பிப் பிழைத்து, இனத்தின் அடி கெடாமல் வாழ்கிறார்கள். இவர்கள் வந்தேறிகள் அல்லர். கற்பகாலத்தில் இருந்து இந்த மண்ணிற்கு உரியவர்கள். நகுலேச்சுரம் தோன்றியது இற்றைக்கு ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன், ஏழ்பெருந்தீவுகளிலும் வாழ்பவர்கள் இதிகாச காலத்திற்கு முன்பிருந்தே வாழ்கிறார்கள்.

தோராயமாக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப் பௌத்தர்களால் தோற்றுவிக்கப்பட்ட பௌத்தப் பள்ளிகள், தமது வளர்ச்சிப் போக்கில் சங்குவேலி, கந்தரோடை நகர்களைத் தோற்றுவித்தன. அந்நகரங்களில் பௌத்த பள்ளிகள் கல்விப்பணி, குமூகப்பணி செய்து வருகின்றன. பாண்டியரது முத்தமிழ்க் கழகங்களிலே, ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே, ஈழத்துப் புலவர்கள் வீற்றிருந்து புகழ்பெற்றார்கள். இதனால் எல்லாம், இந்தத் தமிழீழத்தினதும் சம்புகோளத்தினதும் மக்கள் பெற்ற பயன் என்ன? இந்த உயர்வுகளுக்கு உரியவர்களான ஈழத்தீவு முழுவதும் பரந்து வாழும் தமிழர்களால் இனம் அடைந்த நலம் என்ன? தமிழர்கள் எல்லாம் தன்னலம் பேணிகள். இனநலம் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. வெறுமனே தோணிகளில் வந்தேறிய பரதேசிகள், இவ்வளவு காலமும் எம்மை அடக்கி ஆண்டது ஒருபுறமிருக்க, இன்னும் வாள்முனையில் எம்மை அடக்கியாளப் பார்க்கிறார்களே. இதற்கு யார் கரணியம்? இந்தச் சிங்களவர் இராசரட்டையிலும் உருகுணையிலும் இவ்வளவு பலம் பெற்று நிற்கிறார்களே! யார் கரணியம்.

தமிழர்கள்!. தன்னலம் நிறைந்த தமிழர்கள்!. முன்நோக்கற்ற தமிழர்கள்.

தொடரும்...

# தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே!

மோகன் மாறன்

இன்றைய இயந்திரகதி வாழ்வில் நின்று நிதானித்து யோசித்துப் பாரப்பதற்கு ஒன்றுக்குமே நேரமில்லாமல் போய்விட எல்லாவற்றுக்கும் ஒரு நாளை ஒதுக்கி நினைத்துப் பார்த்து பின்னர் அதேகதியில் மறந்துபோய்விடுவது வழக்கமாகிவிட்டது.

அன்னையர்தினம், தந்தையர்தினம், காதலர் தினம், மகளிர்தினம் என முடிவில்லாமல் நீளும் இந்தப்பட்டியலில் இன்னும் சேர்த்துக்கொள்ளப்படாதது கொலைஞர்கள் தினமும்...! கொள்ளையர்கள் தினமும்..! தான். அதற்கு ஏன் தனியாக ஒரு தினம். அவர்கள்தானே தொலைக்காட்சிகளிலும் இன்னபிற ஊடகங்களிலும் கதாநாயகர்கள்போல் தினமும் வலம் வந்துகொண்டிருக்கிறார்கள் என்று நீங்கள் முணுமுணுப்பது என் காதில் விழுகின்றது.

சமீபத்தில் மகளிர்தினம் வந்துபோன கையோடு பிரான்சில் 'உறக்கதினம்' ( La journée du Sommeil ) வந்தது. (ஏதோ பொருத்தம் பார்த்து வைத்ததுபோல..) அதையொட்டிய செய்திகளையும் நீங்கள் ஊடகங்களில் பார்திருக்கக்கூடும். பிரான்சில் 10 இல் 4 பேர் நல்ல சுகமான உறக்கத்தைக் பெறுகின்ற பாக்கியசாலிகளாக இருக்கின்றார்கள் என்று புள்ளிவிபரம் ஒன்று தகவல் கூறி மற்றவர்களின் வயிறறெரிச்சலைக் கிளப்புகின்றது. 50 ஆண்டுகளுக்கு முன்னர் உறங்குவதற்காக அதிகநேரத்தை செலவிட முடிந்தது. ஆனால் இன்றைய நவீன உலகில் உறக்கத்தை கெடுத்துவிட காரணமாகவிருப்பவை இணையத்தளம், தெலைக்காட்சி, முகநூல் என இன்னும்பல. இரவில் தூக்கத்தை தொலைப்பவர்கள் கல்விக்கூடங்களிலும் பணியிடங்களிலும் கவனம் செலுத்த வேண்டிய அருமையான பொழுதுகளை இழந்து விடுகின்றனர். அதுபோக உடல் உபாதைகளுக்கும் உள்ளாகின்றனர். உறக்கம் என்பது வீணாக நேரத்தை கழிக்கும் பொழுது என்று நினைத்துவிடக்கூடாது மீளசக்தியை புதுப்பித்துக்கொள்ள உடலுக்கு அவசியமானது.

சரி நல்ல உறக்கத்தைப்பெற என்ன வழி? இதமான படுக்கை, காற்றோட்டமான அறை (அருகில் குறட்டை விடாத இணக்கமான துணை!) உடற்பயிற்சி, உறங்கவும் எழவும் குறித்த நேரத்தை வழக்கமாகக் கொள்ளல், உறங்குமுன் அளவோடு சாப்பிடுதல் இப்படி நிறையவே சொல்லலாம். துக்கம் இருந்தால் தூக்கம் வராது. மனஅழுத்தம் இருந்தால் தூக்கம் அருகில் வராமல் விலகிப் போய்விடும். ஆக மனதையும் நல்லபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

சின்னதாக இன்னொரு தகவல் அமெரிக்கா, கனடா, ஸ்பெயின் போன்ற நாடுகளோடு ஒப்பிடுகையில் பிரெஞ்சு மக்கள் அதிகநேரம் உறங்குகிறார்கள்.



# ஐயோ கடவுளே!

உலகநேயன்

சிந்திக்க வேண்டியதை
சிந்திக்க வேண்டிய நேரத்தில்
சிந்திக்ககாமல் விடமுடியவில்லை - கடவுளே!
சிந்திக்கின்றேன்?
சிந்திப்பதை எழுதுகின்றேன்...
சிந்திப்பது என் கடமை
செவிமடுப்பது உங்கள் கடமை - கடவுளே!

காடுகளில் விலங்குகளை வேட்டையாட
ஓடிய மனிதர்கள் ஒலிம்பிக்கில் ஓடுகிறார்கள்
உலகத்தின் மூலைமுடுக்குகளில்
முடங்கிக்கடந்த மனிதர்கள்
பல தேசங்களாக பிரிந்து
பல வர்ண தேசியக்கொடிகளோடு
பல வர்ண தேசிய ஆடைகளோடு
அணிவகுத்து வந்த காட்சி
கண்கொள்ளா காட்சிதான்- கடவுளே!

சுதந்திரத்துக்காக போராடும் மக்களை
ஆயுதம் கொண்டு அழிக்கப்படும்போது
உயிரைக் காப்பாற்ற
கடவுளே! கடவுளேயென அழுதவாறு
இரத்தம் தோய்ந்த ஆடைகளோடு ஓடுவதை
கண்டுகொண்டுதான் இருக்கிறீர்கள் கடவுளே!

யாவும் அறிந்த கடவுளே!
தந்தை செல்வாவையும் அறிந்திருப்பீர்கள்
நம்மினத்தை கடவுள்தான் காப்பாற்ற
வேண்டுமென்றார்
ஆயுதம் ஏந்திய போராளிகளின் குரல்கள்
கேட்காமல் இருக்கலாம்
அகிம்சை போராளியின் குரலாவது
கேட்டிருக்கும்
அதே வழியில்தான் தியாகிதிலீபன்
உயிர்நீத்தார்

நாம் தேசமெங்கும் அகதிகளாக ஓடினோம்
நாம் உலகமெங்கும் அகதிகளாக ஓடினோம்
நம்மினம் அழிக்கப்பட்ட போது
நம் தேசிய தேசியக்கொகளை ஏந்தியவாறு
கடவுளே! கடவுளேயென நீதிகேட்டோம்

உலக விளையாட்டு வீரர்களெல்லாம்
ஒலிம்பிக்கில் ஓடி, நீந்தி, பாய்ந்து
விளையாடுகிறார்கள்
வன்னியுத்தத்தில் இரத்தத்தால்
சிவந்த மண்ணின் மைந்தன்சிவந்தன்
பல நூறு மைல் தேச எல்லைகளை
நடை நடையாய் நடந்து ஒரு முறை
நீதிகேட்டான்
இம்முறை உண்ணாநோன்பிருந்து நீதி
கேட்கிறான் கடவுளே!
பல்லாண்டுகாலம் உரிமைகளுக்காக
போராடுகின்றோம்
பல்லாயிரம் மக்களை பலிகொடுத்துவிட்டோம்
கடவுளே!
எந்தப்பதிலும் உங்களிடமிருந்து இல்லை
போராடினால்தான் வாழ்வு என்பது புரிகின்றது.
சேர்ந்து வாழமுடியாவிட்டால்
பிரிந்து போக உரிமையுண்டு
எமது தேசியக் கொடியோடு
எமது தேசிய ஆடைகளோடு
ஒலிம்பிக்கில் அணிவகுத்துவர
தமிழர்களாகிய எமக்கும் உரிமையுண்டு
கடவுளே!

எமது உரிமைகள் மறுக்கப்பட்டால்
ஐயோ! கடவுளேயென! விழிக்காமல்
எப்படி நான் விழிக்க?

# புலத்தில்(பிரான்சில்) வீடு/சொத்து வாங்குதல்

சர்மா

கடின உழைப்பு, குடும்பச் சுமை, தாயகக் கனவு இவற்றின் மத்தியிலும் புலத்தில் நாம் நிரந்தரச் சொத்துச் சேர்ப்பதில் பின்நின்றவர்களில்லை. ஆனால் புகலிடச் சட்டதிட்டங்கள் மற்றும் சமூக கௌரவம் (தாயகத்திலுள்ள) வாய்மை காத்தல், சில அறியாமை போன்ற காரணங்களால் எம்மில் பலர் மீளாக்கடனாளியாக மட்டுமல்ல பின் சந்ததிகளையும் கடனாளிகளாக்குகின்ற அபாயநிலை தோன்றுகிறது. இது அன்றாட வாழ்வாதாரங்களான உணவு, உடை, சிறார்கல்வி போன்றவற்றில் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்துவதால் ஓய்வின்றி மேலும் கடின உழைப்புக்கு ஆளாக வேண்டிவருவதும் 'குடும்பம்' என்ற அத்திவாரத்தைப் பாதுகாக்கவே வீடு வாங்கப் புறப்பட்ட நாம், குடும்பத்தில் கணவனாக, அப்பாவாக மற்றும் சமூகத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளைக் கூட செய்யமுடியாதவனாகவும், நோயாளியாகவும் ஆக் வாய்ப்புண்டுபண்ணுகிறது.

இச்சிறு பகுதி மூலம் மேற்படி முயற்சியில் நான் விழுந்த பொறிகளை, விழாமல் தவிர்த்தவற்றை வணக்கவொளி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்கிறேன்.

கடந்த பத்து ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் இப்போது வீடு வாங்குவதற்கு தகுந்த காலமா




கவே கணிப்பிட முடியும். வட்டி வீதக்குறைப்பு, மேலும் 15-20% விலை வீழ்ச்சி போன்றவையே அதற்கான காரணம். ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நெருக்கடி காரணமாக வங்கிகள் சில கட்டுப்பாடுகளை விதித்தலும் அவற்றை நான் முதல் பந்தியில் குறிப்பிட்ட sup-prime நிலைக்குள் இட்டுச் செல்வதைத் தவிர்ப்பதாகவே கருத்தில் கொள்ளவேண்டும். எதிர்கால ஓய்வூதியமானது 'கழுதை தேய்ந்து கட்டெறும்பு' ஆகிக் கொண்டிருக்கும் நிலையில், நம் உழைப்பின் சேமிப்பானது மண், கல்லில் இடுவதே ஆபத்தில்லாத அழியாச் சொத்தாக இருக்கமுடியும் என்பது முதலீட்டாளர் மற்றும் பொறியிலாளர்களின் கருத்தாகும். இவற்றிலும் பல பொறிகள் வியாபார தந்திர முறையில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நமது தேடலின் மூலம் தவிர்க்க முடியும்.

காட்டிலே நெருப்பு கொளுந்துவிட்டு எரிந்தாலும் மரம் வேரைக் காப்பாற்றி விடுகிறது. மிருதுவாகவும் குளிர்ச்சியாகவும் உள்ள தண்ணீரோ அதை வேரோடு பிடுங்கி எறிந்து விடுகிறது.

# சோதனைகள் எல்லாம் பெண்களுக்குத்தானா?

ஏ.எஸ்.பத்மாவதி

இயற்கையான முறையில் கருத்தரிக்க இயலாத பெண்களின் முட்டையை ஆண் விந்துவுடன் டெஸ்ட் டியூபில் செலுத்தி கருத்தரிக்கச் செய்வது விஞ்ஞானத்தின் சமீப கண்டுபிடிப்பு.

கல்யாணமாகி ரொம்ப நாள் குழந்தை பிறக்காத வர்களிலிருந்து, கருத்தரிக்க வாய்ப்பில்லாத பெண்கள்வரை... குழந்தைப்பேற்றுக்காக இந்த முறையை ஏற்றுக்கொள்கின்றனர்.

ஆனால்,வெனிசுவேலா நாட்டில் நடந்த ஒரு கதையைக் கேட்டால் உடல் நடுங்குகிறது!

ஸொரைடா பிராஸ் என்னும் இருபத்தைந்து வயது வெனிசுவேலா நாட்டுப் பெண்மணியின் கணவர் 1985-ல் இறந்துவிட்டார். ஸொரைடாவு க்குத் தன் அன்பையெல்லாம் செலுத்த ஒரு குழந்தை கிடைக்காதா என்ற ஆதங்கம். ஸொரைடாவின் கிராமத்து டாக்டர் வெனிசு வேலாவின் தலைநகரில் செயற்கைமுறையில் குழந்தையை உருவாக்கும் டாக்டர்கள் பற்றிக் கூறியிருக்கிறார்.

ஸொரைடா, தனது கிராமத்து டாக்டர் கொடுத்த மருத்துவமனையின் அட்ரஸைத் தேடி தலை நகரான கேரகஸ் போயிருக்கிறார். அங்கிருந்த டாக்டர்கள் அவரை ஒரு பெரிய பரிசோதனைச் சாலைக்கு அழைத்துப் போயிருக்கின்றனர். அந்த மருத்துவச்சோதனைச் சாலையில் ஹிட்லர் படம் இருந்ததை ஸொரைடா நினைவு கூர்கிறார். (அவர்கள் நாஜி இயக்க டாக்டர் கள்). அந்தச் சோதனைச்சாலை மனிதாபிமான முறையில் நடத்தப்படுவதால் குறைந்த தொகை க்கே ஆபரேசன் செய்ய ஒப்புக் கொள்வதாக வேறு அந்த டாக்டர்கள் ஸொரைடாவிடம் கூறியிருக்கிறார்கள்.

ஆபரேன் முடிந்த ஒரு வாரத்தில், டாக்டர்கள் ஸொரைடாவின் கரு முட்டைகளை, ஆண் உயிரணுக்களோடு கருத்தரிக்க வைத்துள்ள தாகக் கூறியுள்ளார்கள். பத்து மாதங்கள் கழித்து ஸொரைடா பெற்றெடுத்தது ஒரு நாய் க்குட்டியை....!

ஒரு மனித மிருகமாக இருக்கும் இந்தக் குழந்தையின் கால்கள் கூரிய நகங்களோடு மிருகத்தின் பாதமாகவே இருக்கிறதாம். ரோமம் பட்டுப் போல் மிருதுவாக இருக்கிறது. இந்தக் குழந்தை நாயைப் போலவே குரைக்கிறதாம். இதற்குக் சூகி என்று பெயர் (சூகி என்றால் வெனிசுவேலா நாட்டு ஸ்பானிய மொழி பேசும் மக்கள் மத்தியில் 'நம்பிக்கை' என்று பொருள்) வெனிகவேலாவில் வம்சாவளி பற்றி ஆராயும் சில ஆராய்ச்சியாளர்கள் இந்தக் குழந்தை பற்றிக் கேள்விப்பட்டதிலிருந்து அதிர்ச்சி அடை ந்திருக்கிறார்களாம். கார்லோஸ் சான்ச்செஸ் என்ற விஞ்ஞானி இந்த (மனித)நாய்க் குழந்தை பற்றி அதிர்ச்சி அடைந்திருப்பதோடு, அந்தத் தாய்க்காகவும் வருத்தப்படுகிறார்.

இந்தக் குழந்தையின் சில குணாம்சங்கள் நாயுடையதாகவே இருக்கும். இந்தக்குழந்தை யால் ஐம்பது அடி தூரத்திலிருந்தே தன் உணவை மோப்பம் பிடிக்க முடியும் என்கிறார் அவர்.

ஹிட்லர் காலத்தில் சிறைக் கைதிகளை

வைத்துப்பரிசோதனை நடத்தும் ராணுவ விஞ்ஞானிகள் நிறையப் பேர் இருந்ததுண்டு. அதுபோல் இது புதுயுக நாஜி இயக்கத்தின் கொடுஞ்செயலாக இருக்கலாம் என்று சில விஞ்ஞானிகள் எண்ணுகின்றனார்.

குழந்தைப் பேற்றுக்காக ஏங்கிய ஸொரைடா, தன் கருப்பை ஒரு சோதனைச்சாலையாகிப் போன கொடுமைக்கு என்ன செய்யப்போகிறார்?

இப்படிப் பெண்களை, பரிசோதனைச் சாலை வெள்ளெலிகளாக்கும் சமூகக் கொடுமையை (நாய்க் குழந்தை பிறக்க வைத்தது அதிகபட்சக் கொடுமை) தினமும் பெண்கள் அனுபவிக்கிறார்கள். காப்பர்-டி என்ற பெயராலும் கருத்தடை மாத்திரைகள் என்ற பெயராலும், புதிது புதிதாக மார்க்கொட்டில் நுழைக்கப்படும் மத்திரைகள் யாரை நோக்கிக் குறிவைக்கப்படுகின்றன? பெண்களைத்தான்.

அமொரிக்காவில் பின் விளைவுகள் ஏற்படுவதனால் தூக்கியெறியப்படும் காப்பர்-டி-க்கள் இந்திய மற்றும் மூன்றாம் உலகநாட்டுப் பெண்களுக்கு இலவசமாகப் பொருத்தப்படுகின்றன.

அபார்ன் செய்துகொள்ள ஆஸ்பத்திரிக்குப் போகும் பெண்களுக்கும், பிரசவம் முடிந்த பெண்களுக்கும் அவர்களின் ஒப்புதல் இன்றியே காப்பர்-டி பொருத்தப்படுகிறது. ஹைதராபாத்தில் ஒரு பெண்ணுக்கு வெவ்வேறு சமயங்களில் மூன்று காப்பர்-டி-க்களைப் பொருத்தியிருக்கின்றார்கள். அதிகப்படியான இரத்தப்போக்கில் அந்தப் பெண்மணி ஆஸ்பத்திரிக்குப் போனபோது அவருக்குள் மூன்று காப்பர்-டி-க்கள் பொருத்தப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. குழந்தை பெற்றுக்கொள்ள சோதனைகளுக்குள்ளாவதும் பெண்களே. குழந்தை வேண்டாமென்றால் தற்காப்பு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியதும் பெண்களே. ஏனெனில் இங்கு சமூகப் பார்வையில் பெண்மை முழுமை அடைவதே தாய்மையில்தான். தாய்மையை அனுபவிக்க முடியாதவர்கள் பெண்கள் இல்லை... அவர்கள் பிறப்பு வீண் என்றல்லவா ஆகிவிட்டது! உடல் நடுங்குகிறது.... மலடி என்ற அவப்பெயருக்கு அஞ்சித்தானே இந்த டெஸ்ட் டியூப் பரிசோதனைகள்?

பெண்ணின் மன உணர்வுகளை மதியாமல், இப்படி அவர்களைச் சோதனைச்சாலைக் கருவிகளாகப் பாவிக்கும் முயற்சிகளும், அராஜகங்களும் கொஞ்சமாவது வெளிச்சத்துக்கு வரத்தொடங்கிவிட்டன. இதுவே ஒரு நல்ல ஆரம்பம்!

பெண், குழந்தை பெற்றுத் தள்ளும் மெஷின் மட்டுமே அல்ல, அவளும் ஒரு மனிதப்பிறவி தானே? குழந்தை பெற்றுக்கொள்ள முடியாமல் போனாலும், தான் ஒரு பூரண மனுஷி என்ற எண்ணம், உறுதி பெண்களுக்கு வரவேண்டும்.

நன்றி.

## நூல்களும் பயில்தலும்

பயனற்ற புத்தங்கள் அனைத்தையும் படிப்பது காலத்தை வீணாக்கும் ஒன்றாகும் என்பதால், அவற்றைப் படிக்காமல் இருப்பதே மிகச் சிறந்தாகும்.

மாபெரும் கருத்துகளுக்கும், பெருந்தன்மையான உணர்வுகளுக்கும் மூலமான முதன்மையான, புத்தகங்களை மட்டுமே படிப்பது என்பதை ஒரு விதியாக ஏற்படுத்திக் கொள்.



# 'அ' க்களும் 'மு' க்களும்



தமிழ்த்தம்பி

கண்களில் கண்ணீர் வந்தால் எம்மையறியா மல் கைகள் துடைக்கும். நாம் துடைக்கும் உணர்வற்றிருந்தோம். பெய்த மழைத்தண்ணீ ரில் எம் கண்ணீர் கலந்து கொண்டிருந்தது. ஊரில் செத்த வீடென்றால் உற்றார், உறவினார் கூடி வீட்டு முற்றத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். நாங்கள் அமர்ந்திருந்த இடம் செத்த நாடாக காட்சியளித்தது. பிரான்ஸ் நாட்டின் பாராளுமன்ற புற்தரை முற்றத்தில் நாம் அமர்ந்திருந்தோம். எனக்கு பக்கத்தில் நாம் இதுவரை பார்த்திராத பல உறவுகள் உட்கார்ந் திருந்தார்கள். ஒருவர் வட்டுக்கோட்டையாக இருக்கலாம். இன்னொருவர் மட்டக்கிளப்பாக இருக்கலாம். நாம் ஒருவரோடு ஒருவர் பேச மனமற்று பேசா மடந்தைகளாக இருந்தோம். எமது சிந்தனை முழுவதும் முள்ளிவாய்க் காலை நோக்கி இருந்தது. கொல்லப்பட்டுக்கொ ண்டிருக்கும் முகம் தெரியா எம் உறவுகள் மனக் கண்முன்னே தெரிந்தார்கள். செல் அடிகளா லும் விமானக் குண்டு வீச்சுக்களாலும் தமிழ் உறவுகள் கொத்துக்கொத்தாக செத்துக் கொண்டிருப்பதாக ஒருவர் அறிவித்தார்.

மழைபெய்து இருட்டிக்கொண்டிருந்தது. எங்கள் மனங்களும் இருட்டிக்கொண்டிருந்தது. மிகப் பெரிய துயரத்தில் நாம் வீடுகளுக்குள் முடங்கி க்கிடக்காமல் கூட்டாக கூடியிருந்து சோகத்தை தாங்கிக்கொள்ள பிரான்சு அரசாங்கம் வழிவிட் டிருந்தது. வெளிச்சத்திற்காக நடப்பட்டிருந்த மின்விளக்குகள் எமது துயரை பகிர்ந்துகொள்ள உதவின.

மழை நனைக்காமல் இருப்பதற்காக மெழுகு சீலைகள் கொடுக்கப்பட்டது. இளைஞர்கள் மெழுகு சீலையை பிடித்தவாறு கூடியிருந்த மக்களை சுற்றி ஓடிக்கொண்டிருந்தார்கள்.

நாம் ஒரு இனத்தவாராகவன்றி ஒரு குடும்பத்தினர் போல் ஒன்றாகி இருந்தோம். வார்த்தைகளின்றி எமது முகங்கள் மட்டும் பேசிக்கொண்டது. எமது மக்களை காப்பாற்ற வேண்டுமென்ற உணர்வுதான் எமக்குள்ளே ஓடிக்கொண்டிருந்தது.

இன்வலீட் (invalides) இற்கு வரும்படி கேட்டிருந்த நன்பனையே நான் மறந்து போயிருந்தேன். சிறுவர்கள், சிறுகுழந்தைகள் கூட குடும்பத்தோடு வந்து இருந்தார்கள். சிலர் சிறுவர்கள், குழந்தைகளுக்கு சன்வீச், பிஸ்கட் உணவுகளை கொடுத்துக்கொண்டு வந்தார் கள். அவர்களில் ஆனந்தனும் ஒருவராக இருந்தார். ஆனந்தன் சோகமோ, மகிழ்ச்சியோ ஒரு இடத்தில் இருக்கமட்டார், எனக்கு தனி மையாக இருப்பது பிடிக்கும். ஒருவரை ஒருவர் முகம் பார்த்துக்கொண்டோம். பேச மனம் வரவில்லை.

இரவு பன்னிரண்டாகிக்கொண்டிருந்தது. பாரீஸ் உணவகங்களில் வேலை செய்தவர்கள் தாம் சாப்பிட்டார்களோ என்னவோ வரும்போது கையில் சண்வீச்சுகளைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். தமிழர்களென்ற உணர்வு அங்கு மேலிட்டிருந்தது. வாகன நடமாட்டங்கள் அந்தப்பகுதியில் குறைந்து கொண்டிருந்தது. இளைஞர்கள் தெருக்களில் இறங்கி நின்றார் கள் அந்தப்பகுதி முழுவதும் தமிழ் மக்கள் கூடியிருந்தார்கள். பலர் தன்னார்வத் தொண்டர் களாக செயற்பட்டார்கள். Lachapelle இல்

உணவகங்களை வைத்திருந்தவர்கள் தேனீர் கொடுத்தார்கள். நாம் அந்தப்பகுதியெங்கும் நனைந்தும், நனையாமலும் நடந்து கொண்டிருந் தோம். பூமிக்குள் என்ன நடக்கிறது என்பது பற்றி பூமி கவலை கொள்வதில்லை. பூமி சுற்றிக்கொண்டிருந்ததில் அடுத்த நாள் விடியத்தொடங்கியது. பிரான்ஸ் பாதுகாப்பு படையினரின் பேரூந்தொன்று வந்து தரித்து நின்றது. பாதுகாப்பு கவசங்கள் அணிந்த காவல்துறையினர் வந்திருந்தனர். சிவில் உடை யில் சில பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வைலசில் பேசிக்கொண்டிருந்தார்கள். காவல் துறையினர் எம்மை பார்த்து பேசுவதிலிருந்து ஏதோ நடக்கப் போகிறதென்பதை புரிந்து கொண்டோம்.

தொடரும்...


# பணம் வேண்டவே வேண்டாம்!

மோகன் மாறன்

'காசேதான் கடவுளடா' என்று தொடங்கும் பிரபல்யமான திரையிசைக்கானம் உண்டு. 'பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்' என்ற முதுமொழியும் உண்டு. இரண்டுமே மனித வாழ்வில் பணத்தின் முக்கியத்துவத்தை அனுபவரீதியாக எடுத்துரைக்கிறது. அது சரிதான்! பணம் இல்லாமல் மனிதன் வாழமுடியாதா என்ன? என்று ஒரு கேள்வியை உங்களிடம் கேட்டால் நீங்கள் என்ன சொல்வீர்கள்? என்ன விளையாடுறீங்களா? வேலைக்குப் போனால் கூட மாதமுடிவில் கடனில் தான் வண்டியோடுகிறது. இந்த இலட்சணத்தில் பணமில்லாமல் வாழ்வதாவது! என்று நீங்கள் எதிர் கேள்வி கேட்பீர்கள்.

அண்மையில் சுவையான செய்தியொன்றை DIRECT MATIN பத்திரிகையில் வாசித்தேன். டானியல் சுவெலோ என்ற அமெரிக்கர்(51 வயது) காசில்லாமல் வாழ்வது என்று முடிவெடுத்து வாழவும் தொடங்கிவிட்டார். கடந்த 12 ஆண்டுகளாக டானியல் ஒரு 'டொலர்' தாளினை கூட தன் கையால் தொட்டதே இல்லையாம்! தனது கடவுச்சீட்டு வாகனச்சாரதிப் பத்திரம் என்பவற்றையும் தனக்குத்தேவையில்லை என கிழித்தெறிந்து விட்டார். இயற்கையோடு ஒன்றி வாழும் வகையில் வாழும் முறையினை மாற்றிக் கொண்டு விட்டார். பழங்களை பறித்தும் மீன்களை பிடித்தும் தன் உணவுத் தேவை களை நிறைவேற்றிக்கொள்கிறார். நூலக மொன்றின் இலவச இணையத்தை பயன்படுத்தி blog ஒன்றில் தன் அன்றாட வாழ்வினை விபரித்து நூலொன்றினை எழுதி வருகின்றார். 'காசினை கைவிட்ட மனிதன்' என்று அந்நூலுக்கு தலைப்பிட்டுள்ளார். பொருத்தமான தலைப்புத்தான்!





# வாத்தியாரும் கழுதையும்

**பாரிசிலிருந்து அப்பையா**

***வாத்தியார்:*** சிந்திச்சால் சிரிப்புவரும் மனம் நொந்தால் அழுகை வரும்...

***கழுதையார்:*** வழக்கமாய் கேள்வியோட வருவீர்.. இண்டைக்கு பாட்டோட வாறீர்... எனக்கு எரிச்சலை மூட்டாதேயும் வாத்தியார்.

***வாத்தியார்:*** ஏன் கோபிக்கிறீர் கழுதையாரே...?

***கழுதையார்:*** நீர் என்னை அஞ்சு அரைக்கு சந்திக்கிறதெண்டு சொன்ன நீர் இப்ப ஆறரைக்கும் மேலையாகுது...

***வாத்தியார்:*** அதொரு சின்னப் பிரச்சனை, ஏன் அதை பெரிசு படுத்திறீர்?

***கழுதையார்:*** இந்த நேர ஒழுங்கின்படிதான் பள்ளிக்கூடத்திலும்... பாடம் நடத்துகிறீரோ?

***வாத்தியார்:*** கழுதையார் நீர் பிரச்சினையை விளங்கிக்கொள்ளாமல் கதைக்கிறீர். என்ரை மாணவன் ஒருத்தன் பிந்திவந்திட்டான். அதனால்தான் உரிய நேரத்துக்கு என்னால வரமுடியேல்லை...

***கழுதையார்:*** வாத்தியாரெண்டாலும் மாணவரெண்டாலும் ஏன் ஆரெண்டாலும் நேரத்தை மதிக்க பழகவேணும்.

***வாத்தியார்:*** அதுவும் சரிதான் கழுதையாரே, நீரே நேரத்தை மதிக்கிறதெண்டால் நாங்கள்...?

***கழுதையார்:*** நாங்கள் நேரத்தை மதிச்சுத்தான் வாழுறம். என்ர எசமான் என்னிலை பொதியை வைச்சுப்போட்டு போற வாற வழியிலை ஆரையும் கண்டால், ஊர் வம்பு பேசிக்கொண்டு நிற்பார். எனக்கு எரிச்சல் எரிச்சலாய் வரும். அதேன் மிருகங்களின்ரை மன உளச்சலை விளங்கிகொள்ளுறியளில்லை...?

***வாத்தியார்:*** மனிசரே மற்ற மனிசரின்ரை மன உளைச்சலை விளங்கிக் கொள்ளுறதை காண முடியேல்லை பிறகு...

***கழுதையார்:*** நீங்கள்தான் நேரம் பொன்னானது காலத்தே பயிர் செய் எண்டு பழமொழியளை சொல்லிச்சொல்லியே நேரத்தை வீணடிக்கிற ஆக்கள்.

***வாத்தியார்:*** கழுதையார் நீர் எங்கிடை சனங்களை கண்டபடி குற்றம் சாட்டாதேயும். எங்கிட சனங்கள் கடினமான உழைப்பாளியள்.

***கழுதையார்:*** நான் அதை மறுக்கேல்லை. ஆனால் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு நாளிலை ஒரு மணித்தியாலத்தை வீணடிச்சால், உலக சனங்கள் வீணடிக்கிற மொத்த நேரத்தையும் சிந்திச்சுப்பாரும். எவ்வளவு நேரம் வீணடிக்கப்படுகிறதெண்டு...? அந்த நேரத்தை ஒவ்வொருத்தரும் சரியாய் பயன்படுத்தினால் மேலும் முன்னேறலாமல்லோ...?

***வாத்தியார்:*** அப்ப எப்ப பார்த்தாலும் வேலை வேலையெண்டு அலையச் சொல்லுறீரோ...?

***கழுதையார்:*** அந்த நேரத்திலை உடல் பயிற்சி செய்தால், உடம்பை ஆரோக்கியமாய் வைச்சிருக்கலாம். நல்ல புத்தகங்களை வாசித்தால்,

உள்ளத்தை ஆரோக்கியமாக வைச்சிருக்க லாம்.

***வாத்தியார்:*** உண்மைதான் நானிங்கை மெற்றோவிலை வேலைக்குப் போகேக்குள்ள சனங்கள் நிற்கமாட்டாமல் இடிபடும். பிரெஞ்சுக்காரர், ஒரு கையை எங்கையாவது பிடிச்சுக்கொண்டு மற்றக் கையிலை புத்தகத்தை வைச்சுக் கொண்டு வாசிப்பினம்.

***கழுதையார்:*** புத்தகம் வாசிச்சுப் பழகினவனுக்குத்தான், புத்தகத்தின்ரை அருமை தெரியும். நீங்கள் அறிவை வளர்காதபடியால்தான், தொழிலாளர் கூட்டமாயே இருக்கிறியள்.

***வாத்தியார்:*** கழுதைக்குத் தெரியுமோ கற்பூர வாசனையெண்டு எங்கிடை சனம் சொல்லுவினம். ஆனால் உமக்கு புத்தக வாசனையும் தெரிஞ்சிருக்கு.

***கழுதையார்:*** யப்பான்காரர்தான் நேரத்தை சரியாய் திட்டமிட்டு பயன்படுத்துகிறார்கள். பதினைஞ்சு நிமிடம் பயணம் செய்தாலும் பெண்கள் கையில் ஏதோ ஒன்றை வைச்சு பின்னிக் கொண்டிருப்பார்கள். அல்லது புத்தகத்தை வாசிச்சுக்கொண்டிருப்பார்கள்.

***வாத்தியார்:*** உண்மைதான். நாங்களும் நேரத்தை சரியாக திட்டமிட்டு பயன்படுத்தினால், எங்கிடை வாழ்க்கை காலத்திலை அடைய வேண்டிய இலக்குகளை அடைஞ்சிடலாம்.

கழுதையார் வருவார்...

# தமிழுயர அறிவுயரும்

**மோகன் மாறன்**

தமிழ்மொழியை கற்பதில் என்மகனுக்கு (8 வயது) ஆர்வத்தை விருப்பத்தை உண்டாக்க வேண்டும் என்ற நோக்கில் இதழொன்றில் வாசித்த தகவலொன்றை அன்பாய் எனதருகில் அவனை அமரவைத்து சொல்லத் தொடங்கினேன்...

டென்மார்கில் பாடசாலைகளில் 100 க்கு 100 மதிப்பெண்கள் பெற்று முதல் தரத்தில் சிறப்பு தேர்ச்சி பெற்ற தமிழ் பிள்ளைகளெல்லாம் அவர்களது தாய் மொழியான தமிழிலும் கெட்டிக்காரர்களாக இருப்பதுவும் காரணமாம். நீயும் பிரெஞ்சு மொழியிலும் மற்றைய பாடங்களிலும் கெட்டிக்காரனாக வரவேண்டும் என்றால் தமிழை நன்றாக படிக்கவேண்டும் என்றேன்...

எல்லாவற்றையும் பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்த எனதருமை மகன் என்னிடம் திருப்பியொரு கேள்வியைக் கேட்டான்..?


அது சரியப்பா நீங்கள் தமிழ் ந..ல்...லாய் கதைப்பீங்கள். கனக்கவும் கதைப்பீங்கள்.. அப்ப ஏன் உங்களுக்கு பிரெஞ்சு சரியாய் கதைக்க வருகுதில்லை?!

நான் என்னத்தைச் சொல்ல? இப்புடித்திருப்பி ஒரு போடுபோடுவான் என்று நான் நினைச்சேனா என்ன? ..ம்! (உண்மையாக நடந்தது)

## நம்ம ஊரு நல்ல ஊரு

# பூநகரி

பொன்னம்பலம் குகதாசன்




பூமி தோன்றிய பின் பூமியில் பல மாற்றங்கள் நிலமிருந்த இடத்தில் நீர், நீரிருந்த இடத்தில் நிலம், வீடு இருந்த இடங்கள் காடாக, காடுகளுக்குள் வீடுகள் போய்விட்டன. அவ்வா றே மனித இனத்திலும் மாற்றங்கள், நகர்வுகள் தொடர்கின்றன. ஆனால் மனிதனின் செயற் பாட்டுத்தடயங்கள் அவன் வாழ்விடங்களுக்கு ஆதாரமாகின்றன. இறந்தவனுக்கு இருந்தவன் நினைவுக்கல், கல்லறை கட்டினான், அவை இன்று வரலாற்றிற்கு சான்றுகளாகின்றன.

யாழ்க் குடாநாட்டிற்குத் தெற்கே யாழ்ப்பாணக் கடலேரியை அடுத்து பூநகரிப் பிரதேசம் அமைந்துள்ளது. கறுக்காய்தீவு - ஆனைகட்டி முனையிலிருந்து மேற்காகக் கௌதாரிமுனை யை அடுத்துக் காணப்படும் பூநகரி கல்முனை வரையிலான கடலோரமே இதன் வட எல்லையாகும். ஆனைகட்டி முனையானது ஆனையிறவிற்குத் தென்மேற்காக ஒரு சில கிலோ மீற்றர்கள் தொலைவில் கடலேரியை அடுத்துக் காணப்படுகிறது. இவ்வாறே கல் முனையும், மண்டைதீவும், யாழ்ப்பாணம் ஆகிய வற்றிற்குத் தென்கிழக்கே சில கிலோ மீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ளது. பூநகரி வாடியடி யை மையமாகக்கொண்டால் வாடியடிக்கும் கல்முனைக்கும் இடையிலான தூரம் 24 கிலோ மீற்றர்கள் ஆகும்.

வாடியடியிலிருந்து கிழக்காகப் பரந்தன் வீதியில் 16 கிலோ மீற்றர்வரை இப்பிரதேசம் பரந்து ள்ளது. வாடியடியிலிருந்து தெற்காக மன்னார் வீதியில் சுமார் 35 கிலோ மீற்றர்வரை இப்பிரதேசம் வியாபித்துள்ளது.

பூநகரிவரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மிகத் தொன்மையான ஒரு பழம்பெரும் இராச்சியத் திற்கு முன்னோடியாக ஈழத்தின் வட புலத்தே இருந்த இராச்சியம் இதுவேயாகும். வரலாற்றுத் திரிபுகள், மறைப்புக்கள், மாற்றுக்களுக்கு மத்தியில், அண்மைக் காலத்தில் பூநகரிப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பல வரலாற்றுச் சான்றுகளைத் தந்ததுடன் பல உண்மைகளை உறுதி செய்துள்ளன. நாகதீபம் அல்லது உத்தரப்பிரதேசம் என்று அழைக்கப் பட்ட இப்பகுதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்கள் தென்னிந்தியர்களால் மேற் கொள்ளப்பட்டதென்று, தென்னிலங்கை ஆய் வாளர்களில் சிலர் தெரிவிக்கும் கருத்தை மறுக்கின்றார்கள். இவர்கள் இப்படையெடுப்பு கள் யாவும், பூநகரிப் பகுதியிலிருந்தே மேற்கொள்ளப்பட்டதை வலியுறுத்தி உள்ளனர்.

முதல் நல்லூர் முருகன் ஆலயம் பூநகரி யில்தான் அமைந்திருந்ததா? என்ற கட்டுரை யில் (வீரகேசரி 27.08.95) கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். திரு.ப.புஸ்பரத்தினத்தின் ஆய்வுகளில் இருந்து பூநகரிப் பிரதேசம் ஒரு பண்டைய இராச்சியத்தின் வளமான பிரதேச மாக விளங்கி இருக்கிறது எனத்தெரிகிறது.

பூநகரிப் பிரதேசத்தில் கிடைத்த அகழ்வாராய்ச்சிப் பொருட்கள் இதனை நிரூபிக்கின்றன. அங்கு கிடைத்த மட்பாண்டங்கள், சோழ நாணயங்கள், ஈழஊர் என்ற காட்டுப்பகுதியில் காணப்படும் அழிவுகளும் இந்தக்கருத்தை வலியுறுத்தியிருக்கின்றன.

பூநகரிப் பிரதேசம் இன்றைய குறுகிய எல்லையுள் அடங்காது. கிழக்கே முல்லைத்தீவில் இருந்து மேற்கே அருவியாறு வரை பரந்து கிடந்தது, இப்பிரதேசம் காலத்திற்குகாலம் உத்தரதேசம் என்றும் நாகதீபம் என்றும் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதற்குப் பூநகரியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மட்பாண்ட ஒடு ஒன்றில் உள்ள ஈழம் என்ற வாசகம் ஆதாரமாயிற்று என புஸ்பரத்தினம் கூறுவது கவனிக்கத்தக்கது. எனவே தமிழ் இராச்சியம் ஒன்று இப்பிரதேசத்தில் நிலைகொண்டிருந்தது.

பூநகரி பிராமிச் சாசனம் கி.மு.3 ஆம் கி.மு.2 ஆம் நூற்றாண்டில் சங்ககாலத்தை ஒத்த தமிழ் வேந்தரின் ஆட்சி வட இலங்கையில் இருந்ததை உறுதிப்படுத்துகிறது என்கிறார் தமிழ் நாட்டின் முதன்மைச் சாசனவியலாளர் ஐராவரம் மகாதேவன். யாழ்பாடியின் ஐதீகக் கதையின்படியும் கூட தமிழ்மன்னன் ஒருவன் தனது இராச்சியத்திற்கு வடபுறத்தில், அன்று மக்கட் செறிவின்றி மணற்றிடராக இருந்த பகுதியை யாழ்பாடிக்குப் பரிசாக அளித்தான் என்பதிலிருந்தும் யாழ்ப்பாணம் ஆட்புலம் மிக்க பகுதியாகமாற முன்னரே அதற்குத்தெற்கே குடாநாட்டிற்கு வெளியே ஒரு இராச்சியம் இருந்திருக்கின்றது என்பது கண்கூடு.

### பூநகரம் பூப்பொறுக்கியானது

பூநகரி பல்துறை வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. பூநகரி என்ற பெயர் பூ நகர் ஏரி பூநகரி என்ற அடிப்படையில் உருவாக்கியதாகும். காலநிலையின் ஓட்டத்தைப் பார்க்கும் போதும் மழைவீழ்ச்சியின் சராசரிப் பெறுமானம் குறைந்துகொண்டே வருவதை அவதானிக்கலாம். வரட்சிநிலை ஏற்படும்வரை தரையின் கீழுள்ள நீரை மேற்கொண்டு வரவேண்டிய தேவை அதிகமாக இருக்கவில்லை. எனவே மக்களும், ஏரிகளும் சிற்றாறுகளும் நிறைந்த இப்பகுதியில் செறிவாக வாழ்ந்தனர். அதாவது யாழ்ப்பாணக்குடா நாட்டில் தரையின் கீழ் உள்ள நீர்வளத்தைப் பயன்படுத்தும் ஆற்றலை மக்கள் பெற முன் தரை மேல் வடிகால் அமைப்புக்களிருந்த பூநகரிப் பகுதியிலேயே குடியிருப்புகள் அதிகமாக இருந்தன. இன்று வரை இப்பகுதியில் காணப்படும் குளங்களும், வாய்க்கால்களும் ஒரு வரப்பிரசாதமான இயற்கையான நன்னீர் வளமாக, இப்பகுதி பூத்துக் குலுங்கும் நகரமாக விளங்கியதுடன் அரண்மனை, அரசவிடுதிகள், ஆலயங்களுக்குமான பூக்களை இந்நகரமே வழங்கியதால் பூநகரம், பூப்பொறுக்கி போன்ற பெயர்களும் வழக்கிலிருந்து வந்ததுள்ளன. பின்பு அந்நிய ஆதிக்க காலத்தில் இப்பகுதியின் நன்னீர்வளம் இப்பகுதியில் நெல், சிறுதானியங்கள், மரக்கறிவகைகள், தென்னை, வாழை என்பனவற்றைப் பெருமளவில் பயிரிட உதவின என்பதுடன் நிலம், வனம், கடல் எனப் பல்துறை வளங்களும் நிறைந்த பகுதியாக விளங்கி வந்துள்ளது.

யாழ்-நல்லூர் கந்தசாமி கோயிலின் தாய்க் கோயில் பூநகரி நல்லூரில் தான் அமைந்திருந்தது. தெற்கத்திய படையெடுப்பு ஒன்றினைத் தொடர்ந்து பூநகரியின் நல்லூர் இராசதானியும் மக்களின் கணிசமானோரும் யாழ் குடா நாட்டிற்கு இடம் பெயர்ந்துள்ளனர். இந்த நகர்வுடன் பூநகரி நல்லூர் முருகன் ஆலயமும், யாழ்ப்பாணம் முத்திரைச்சந்தியில் இன்று கிறித்தவத் தேவாலயம் உள்ள இடத்திற்கு இடம் பெயர்ந்தது. இத்தேவாலயமானது 1621 இல் பிலிப்தே ஒலிவேறா என்ற போர்த்துக் கேயத் தளபதியால் அங்கிருந்த நல்லூர் கந்தசாமி

ஆலயம் அத்திவாரத்துடன் கிளறி எறியப்பட்டுக் கட்டப்பட்டதாகும். பின்பு 1734ம் ஆண்டளவில் கிருஷ்ணையர் சுப்பையர் என்ற அந்தணர் முத்திரைச் சந்திக்கு அருகே கந்தசாமி கோயில் ஒன்றையும் உருவாக்கினார். பின்பு கி.பி. 1749ம் ஆண்டளவில் அரச அனுசரணையுடன் முஸ்லீம்கள் அகற்றப்பட்டு இன்றைய சேய்க்கோயில் கட்டப்பட்டது.

**பதினொரு தடவைகள் மாற்றப்பட்ட நல்லூர்**

கி.பி. 10ஆம் நூற்றாண்டில் ஈழவூர் என்ற பெயருடன் பூநகரிப் பிரதேசம் சோழரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இவ்வேளை இப்பிரதேசத்தின் சோழப்பிரநிதியாக இருந்த புவனபாகு பூநகரில் இன்று வரையுள்ள நல்லூரில் தனது மாளிகையை அமைத்தான். பின்பு ஆறாவது பாரக்கிராமபாகு தென் இலங்கையை ஆண்டு கொண்டிருந்தபோது தனது வளர்ப்பு புத்திரனும் சேனாதிபுதியுமான சப்புமல் குமரய என்ற செண்பகப்பெருமாளை ஒரு பெரும் படையுடன் உத்தரப் பிரதேசத்தை முழுமையாகக் கைப்பற்றும் நோக்குடன் அநுராதபுரத்தில் இருந்து அனுப்பினான். அவனும் வடபுலத்தை வென்று யாழ்ப்பாணம் புகு முன் பூநகரி நல்லூரில் (முதல் நல்லூரில்) இருந்த கட்டிங்கள், மாளிகைகள் எல்லாவற்றையும் அழித்தான். அச்சமயம் இங்கிருந்த முருகன் ஆலயமும் அழிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து கி.பி 1450 ஆம் ஆண்டிலிருந்து கி.பி 1467வரை யாழ்ப்பாணத்தை ஆண்ட செண்பகப்பெருமாள் தன்னால் பூநகரி நல்லூரில் அழிக்கப்பட்ட கந்தவேள் தோட்டத்தை மீண்டும் யாழ்ப்பாண நல்லூரில் (2வது நல்லூர்) கட்டுவித்தான். பூநகரி நல்லூரின் பெயர்ப்பே யாழ்ப்பாண நல்லூரின் தோற்றமாயிற்று.

இந்த நல்லூர் என்ற பெயர் தனியே ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டும் காட்டுவதாக இல்லை. இராசதானிகளின் அமைவிடங்கள் நல்லூர் என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளன. காலத்தற்குக் காலம் அவ்வக் காலத்தேவையை ஒட்டி அவ்வவ் மன்னர்கள் பாதுகாப்பு வசதி கருதி இந்த நல்லூரை நகர்த்தியுள்ளனர். 'ஈழவூர்' என்ற பூநகரி பகுதியின் மிக நீண்ட புராதன வரலாற்றின் இந்த நல்லூர் பதினொரு தடவைகள் மாற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. பன்னிரண்டாவது நல்லூரே யாழ்ப்பாண நல்லூராகும். அத்துடன் இந்த நல்லூர் என்ற பெயர் தென் இந்தியாவில் உள்ள பல ஊர்களுடன் தொடர்புள்ளதாகக் காணப்படுவது கவனிக்கத்தக்கது.

**வாசனையுள்ள அரிசிவகைகள்**

பூநகரி என்றதும் ஞாபகத்திற்கு வருவது பூநகரி அரிசி என அழைக்கப்படும் கறுப்பு அரிசியே வடமாகாணத்தின் நெற்களஞசியம் என வருணிக்கப்பட்ட பூநகரியின் மொட்டைக்கறுப்பன், பச்சைப்பெருமாள், நாலுமொழி, செந்நெல், முத்துச்சம்பா, சீரகச்சம்பா இப்படிப் பல வகையான நெல் இனங்கள் காலாகாலமாக விளைவிக்கப்பட்டன. இவ்வாறு அறுவடை செய்யப்பட்ட நெல் இயந்திரப்பாவனை அற்ற காலப் பகுதியில் தோணிகள் மூலம் ஞானிமடம் நாகதேவன் துறையூடாக யாழ்ப்பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இவ்வரிசி வகைகள் நல் வாசனையைக் கொண்டிருந்தமையாலும் நாவிற்குச் சுவையூட்டுவதாய் இருந்தமையாலும், அனைத்து மக்களும் பூநகரி அரிசியைப் பெரிதும் விரும்பியுண்டனர். நெல்லினங்கள் யாவும் கூடுதலாக வெட்டுக்காடு, பரம்பன்கிராய், சித்தன் குறிச்சி, செட்டிய குறிச்சி, ஞானிமடம், கறுக்காய்த்தீவு, செல்லையாதீவு ஆரியம் பொந்து, தம்பிராய், மட்டுவில்நாடு, ஆலங்கேணி, நல்லூர் ஆகிய இடங்களில் காலாகாலமாகப் பெருமளவில் விளைவிக்கபட்டன.

இங்குள்ள மக்களுக்கு உதவப் பல ரகத்தினரும் பலவழிகளில் பாடுபட்டுக்கொண

டிருக்கின்றனர். குறிப்பாகக் கிளிநொச்சி அரச அதிபர் திரு. ரி. இராசநாயகம் செஞ்சிலுவைச் சங்கப் பொறுப்பாளர் திரு.பி. விநாயகமூர்த்தி மற்றும் மருத்துவர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் அனைவரும் தத்தமது இயன்றளவு பெரும் பணி ஆற்றி இருக்கின்றனர். வன்னிப்பகுதியில் இருந்து வரும் அகதிகளுக்கு நிவாரணம் அளிப்பதில் வவுனியாப் பிரிவு பிரதேசச் செயலாளர் செல்வி மேரி நாமில்டர் வவுனியா அரச அதிபருடன் இணைந்து பெருஞ்சேவை ஆற்றியிருக்கின்றார். கடுமையான சுகவீனமுற்றோரை வவுனியா செஞ்சிலுவைச் சங்கத்திலிருந்து திரு.திசோக்குமார் அவர்களும் தமது பங்கைச் செவ்வனே செய்து இருக்கின்றார்.

## நூல்களைத் தெரிவு செய்தல்

ஒரு புத்தகம் என்பது நமது காலத்தின் வாழ்க்கையாகும். ஒவ்வொருவருக்கும், முதியவரானாலும், இளைஞரானாலும், சுறுசுறுப்பானவர்க்கும், சோம்பேறிக்கும், குழந்தைகளுக்கும் கூட தேவைப்படுவதாகும். இதில் உள்ளது என்னவென்றாலும் அவர்களுக்குரிய சரியான பொருத்தமான புத்தகத்தை தேர்தெடுப்பதுதான். வேறுபாடின்றி அனைத்தையும் படிப்பது என்பது படிக்காமலே இருப்பது என்பதை விட அவர்களுக்கு அதிகத் தீங்கு விளைவிப்பதாகும் என்பதை ஒப்புக்கொள்பவர்களில் நாம் முதலில் இருப்போம்.



## என்னம்மா சாப்பாடு

## சாமோன் (சாடின்) குழம்பு

### பத்மினி சற்குணராஜா

| | |
|---|---|
| சாடின்மீன்(சாமோன் டின்) - | (அரைக்கிலோ) |
| சிறிய வெங்காயம்(அரிந்தது) - | 1மே.கரண்டி |
| காய்ந்த மிளகாய்(அரைத்தது) - | 20 |
| பூண்டு(அரைத்தது) - | 3பல்லு |
| இஞ்சி(அரைத்தது) - | 3 சிறிய துண்டம் |
| கருவாப்பாட்டை - | 2 சிறிய துண்டம் |
| ரம்பை இலை - | சிறிதளவு |
| கறிவேப்பிலை - | சிறிதளவு |
| வெந்தயம் - | அரைதேக்கரண்டி |
| தேங்காயெண்ணெய் - | நெய்- 2மே. கரண்டி |
| எலும்மிச்சம் பழச்சாறு | -பாதி |
| தேங்காய் பிழிந்த பால் | -1கப்(பாதித்தேங்காய்) |
| உப்பு | -சுவைக்கேற்ப |

**செய்முறை:**

ஒரு பாத்திரத்தில் எண்ணெயை ஊற்றி நன்றாகச் சூடானதும் வெங்காயம், ரம்பை இலை, கறிவேப்பலை, ஆகியவற்றின் பாதியை இட்டு நன்றாக வதக்கவும். வதங்கியதும் டின் மீன் ரசம் (மீனைத் தவிர்த்து டின்னினுள் இருக்கும் நீர்ப்பபகுதி) தேங்காய் பிழிந்த பால் மீதியுள்ள மளிகைப் பொருட்கள் அனைத்தையும் இட்டு வேக விடவும். குழம்பு நன்றாக வேகியதும் எடுத்து வைத்த மீன் துண்டங்களை அதனுள் இட்டு, குறைந்த வெப்பத்தில் மேலும் சில நிமிடங்களுக்கு வேக வைத்து இறக்கவும். (மீனை மெதுவாகக் குழம்பினுள் இடுதல் வேண்டும். இதனை அதிகமாகக் கிளறினாலும் மீன் துண்டங்கள் உடைந்து விடும்.

# புதிய தேடல்கள்( புதிய எழுத்தாளர்களிற்கான பகுதி )

## பயங்கரவாதம்

வறிய நாடுகளாம்
வளமான நாடுகளை
வளர்ந்து வரும் நாடுகளாம்
வளங்களை திருடிய நாடுகள்
வல்லமையானவர்களை
வளைத்து வைத்து
சூட்டிய பெயர்
பயங்கரவாதம்

## மாங்கொட்டைச்சூப்பி

நீர் வளமும் நிலவளமும்
பார்க்கும் இடம் யாவும்
பசுமை நிறைந்ததாய்
குழைக்காடென
குறும்பு பெயராச்சு
மாங்கனியும் பலாக்கனியும்
ஊர்ப்பெயரை ஊன்றிநிற்க
அணில் காக்கை குருவி
ஆனந்தமாய் கொத்தி கோதிட
அதில் தப்பியதை ஆட்டி உலுப்பி
ஆய்ந்து சில சீவியம் போக்கிய
ஆனந்தம் மேவிட

மீசைக்காரனின் சோலையிலே
மாங்கனியை கடித்துண்டும்
மாங்கொட்டைக் கூந்து மீசை வடிவாகி
மீசாலை மாங்கொட்டை சூப்பியென
காரணப் பெயர் ஆனதுவோ?

அற்புதம்

## இல்லறஇன்பம்

மனம் ஒத்து
மனம் மேவி
மகிழ்வுடன் வாழ்ந்திட
மாலை வேளையில் வீடு வந்து சேர்ந்திடில்
மாண்புடன் வாழ வழி கோலும்

கோ

## நட்பு

வண்டியின்றி சக்கரம் ஒடலாம்
சக்கரமின்றி வண்டி ஒடுமா?
மீன்களின்றி நதி இருக்கலாம்
உலகம் இருக்கலாம்
உலகமின்றி உயிர்கள் இருக்குமா?

## நம்பிக்கை

ஆசையோ நடக்காதா என்று ஆவல்
கொள்ளும்
நம்பிக்கையோ நடந்தேதீரும் என்று
தீர்மானித்துவிடும்

## ஊக்கம்

இளைஞனே அச்சங்களை
நீயே விழுங்கிவிடு
ஊக்கத்தை மட்டும்
பிறருக்கு பரிமாறு

ஜெயம்

## அம்மா.........!

என்னை
ஐயிரண்டு திங்கள்
சுமந்தபோது
வலி இல்லை
எனை ஈன்ற போது
வலி இல்லை
இன்று.....!
நான் உன்னை
எட்டி மிதித்து
இல்லாள்
சொல் கேட்டு துரத்தும் வரை
வலிக்கவில்லை!
வலிக்கிறது
உனக்கு இன்று
நான்
நோய் எனும்
மரணப் படுக்கையில்
உன் அடிவயிறு
எரிகிறது....!
எனை நினைத்து
அம்மா எழுதி
முடிக்கப்படா
கவிதை.....!

## செல்வம்

தேடிச் சென்றேன்
அன்னை மடியை
விட்டு....!
நாடி வந்தது
செல்வம் அல்ல
வறுமை
ஏதிலியாய்
நிற்கின்றேன்
நிழல்தேடி...
கையில் செல்வம்
காணவில்லை
இன்பம்
இன்று தேடினேன்
அன்னை மடியை...!

## வெண்சுருட்டு (சிகரெட்)

தினமும்
தற்கொலை
செய்கின்றது
உன் ஆயுளை நினைத்து...!

**சந்திரராசா அகிலன்**

### நூல்களும் பயில்தலும்

காலங்களின் உண்மையான அடையாளம் என்னவென்று புத்தங்களைப் பார்த்து நீ கண்டுபிடிக்க வேண்டும்.

வாழ்க்கையில் நோக்கம், மக்களின் விருப்பங்கள், உண்மையான செயல்பாட்டுணர்வு ஆகியவற்றைப் புரிந்து கொள்ள உதவும் புத்தகங்களை மட்டுமே நீ படித்து வழிபடு.

எனக்கு மிகவும் விருப்பமான புத்தகம் எது எனில், எதன் பின்னே ஒருபெரிய மனிதனை நான் காண்கின்றேனோ, அதுதான்.


THANGAMALIKAI
BIJOUTERIE
தங்கமாளிகை
உங்களின் மாளிகை
உங்களை
அழகாக்கும் மாளிகை
THANGAMALIKAI
TEXTILES
JEWELLERY
199 RUE DU FG. ST DENIS
75010 PARIS
TEL : 01 42 05 39 05
FAX : 01 42 05 39 06
MÉTRO : LA CHAPELLE OU GARE DU NORD
www.thangamaligai.eur.com



OCEAN TROPICAL
107, Av Pierre Sémard, 95400 Villiers le bel
Tel: 01 39 94 04 00 Fax: 01 39 33 54 87
OCEAN TROPICAL
TEL:01.39.94.04.00
FAX: 01.39.33.54.87
PRODUITS EXOTIQUES
இந்து சமுத்திர கடலுணவுகளின்
இறக்குமதியின் மையம்
ஓசியன் இந்தியன்
OCEAN INDIAN
195, Rue de Fbg St Denis
75010 Paris
Gare du Nord
-La Chapelle
tél: 01 42 09 31 50
fax: 01 42 09 31 60
EXO OCEAN
07, Av. Alexis Varagne
95400 Villiers le bel
tel: 01 34 19 46 97
OCEAN DE LA BEAUTE
3, Av Alexis Varagne
95400 Villiers le bel
tel: 01 39 94 04 00
fax: 01 39 33 54 87